
உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

Dolphin Public School


சிவனருளே சிந்தித்த அடியார்கள்

SIVANARULAE SINTHITHA ADIYARGAL

63 நாயன்மார்கள் மற்றும் 9 தொகையடியார்கள்



சமயக்குரவர்கள் நால்வர்




திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் மாணிக்கவாசகர்

Dolphin Public School

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

சிவனருளே சிந்தித்த அடியார்கள்

63 நாயன்மார்கள் மற்றும் 9 தொகையடியார்கள்



அருள்தரும் ஸ்ரீ கோமதி அம்பாள் சமேத அருள்மிகு ஸ்ரீ திரிபுராந்தீஸ்வரர் பாளையங்கோட்டை, நெல்லை மாவட்டம்

அருள்மிகு திரிபுராந்தீஸ்வரர் உடன் அருள்மிகு கோமதி அம்மாள் பக்தர்களை அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடன் சிவபெருமான் குடும்பத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீ கற்பக விநாயகர், ஸ்ரீ வள்ளி தெய்வானை, ஸ்ரீ முருகப்பெருமான், நான்கு சமயக்குரவர்கள், 63 நாயன்மார்கள், தொகையடியார்கள் சேக்கிழார் பெருமான் அருள்பாலிக்கின்றனர். இவர்கள் உலகிற்கு சிவ தொண்டுகளை உணர்த்தியவர்கள் மேற்கொண்டுள்ள சங்க கால அடியார்களின் படங்கள் பக்தகோடிகளுக்காக 18-9-2005 அன்று பாளையங்கோட்டை திருச்சிற்றம்பல வழிபாட்டு அறக்கட்டளை மற்றும் கொடையாளிகள் சார்பாக அர்ப்பணிக்கப்பட்டது.

SHRI GOMATHI AMBAL SHRI THIRUPURANTHEESWARAR Palayamkottai, Nellai District

The Picture of Graceful SHRI. THIRUPURANTHEESWARAR WITH SHRI GOMATHI AMBAL, gracing the devotees along with Sivakudumbam (The Family of Lord Shiva) which includes Arulmigu Shri Karpaga Vinayagar, Valli Theivanai with Shri Muruga Peruman, Four Samayakuravars, Sixty three Nayanmars, Thogaiyadiyars, Sekkizhar Peruman who made the world known about the Siva thondu and sacrifice of Nayannars. With the above picture, the pictures of above stated Deities and Adiyars, with historical greatness were submitted piously before the devotees for their devotional view on 18-9-2005 by Palayamkottai Thiruchitrambala Vazhipattu Arakkattalai, with the combined help of sponsors, worshipping the Holy Feet of Lord by the Grace of Himself "Avanarulalae Avanthal Vanangi".

உ


ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை ஓம் சிவாய நம :



திருவாரூர் தியாகராஜ சுவாமிகள்



தெய்வச் சேக்கிழார்



மெய்கண்டார் அருணந்தி சிவம் மறைஞான சம்பந்தர் உமாபதி சிவம்

சந்தானக் குரவர்கள்

நமசிவாய
அடியவர் அறுபத்து மூவர் திருவடிகள் போற்றி... போற்றி...



ஸ்ரீமத் சங்கரானந்த மகராஜ்



பூஜ்யஸ்ரீ மாதாஜி வித்தம்மா

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அருள்தரும் **ஸ்ரீ கோமதி அம்பாள்** சமேத அருள்மிகு ஸ்ரீதிரிபுராந்தீஸ்வரர் திருக்கோவிலில் அமையப்பெற்று 18.9.2005 ஞாயிற்றுக்கிழமை சாரதா கல்லூரி நிர்வாகி **ஸ்ரீமத் சங்கரானந்த மகராஜ்** அவர்கள் முன்னிலையில், வள்ளியூர் சாமியார் பொத்தை ஸ்ரீமுத்துகிருஷ்ண சுவாமி மிஷன் நிர்வாகி **பூஜ்யஸ்ரீ மாதாஜி வித்தம்மா** அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்ட அடியவர் அறுபத்து மூவரின் வரலாற்று வண்ண ஓவியங்களின்

"தொகுப்பு மலர்"

The compilation of (Compendium) Colourful Pictures (Arts) of history of Sixty Three Adiyavars which was opened on Sunday 18.09.2005 by the Holy hands of Pooja Shri Mathaji Viththamma, the administrator of Samiyar Pothai Sri Muthu Krishna Swamy Mission, Valliyoor, in the august presence of Srimad Sankaranantha Maharaj, the administrator, Sharada College, in the Holy Temple of Graceful Shri Gomathi Ambal along with Graceful Shri Thirupurantheeswarar, Palayamkottai, Tirunelveli District.

அடியவர் அறுபத்து மூவரின் வண்ண ஓவியங்களை
உயிரோட்டத்துடன் வரைந்த
சிவத்திரு. **S. மாலையப்பன்** அவர்களுக்கு
நன்றியினை சமர்ப்பிக்கிறோம்.



We Submit our thanks to
Sivathiru S. Malaiappan
Who painted the colourful pictures (Arts)
of Sixty three Adiyavars lively.

உ

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை ஓம் சிவாய நம :

சிவனருளே சிந்தித்த அடியார்கள் 63 நாயன்மார்கள் மற்றும் 9 தொகையடியார்கள்

வாழ்க வளமுடன் !!! வெற்றி ! வெற்றி !! வெற்றி !!!

எண்ணம்

திருச்சிற்றம்பலம்

தேவகோட்டை அருள்மிகு ஸ்ரீமந்திரமூர்த்தி விநாயகர் திருவருளாலும், எங்கள் குலதெய்வம் இலங்குடி ஸ்ரீபூர்ண புஷ்கலாம்பா சமேத ஸ்ரீபகற்சாலமூர்த்தி அய்யனார் திருவருளாலும், எங்களது நகரக் கோயில் இலுப்பைக்குடி அருள்மிகு சௌந்தர நாயகி சமேத ஸ்ரீதான்தோன்றீசுவரர், வைரவமூர்த்தி திருவருளாலும், எங்கள் அபிமான தெய்வமான ஸ்ரீகாசி விசுவநாதர், ஸ்ரீகாசி விசாலாட்சி, ஸ்ரீகாசி காலபைரவர் மற்றும் ஸ்ரீகாசிஅன்னபூரணி திருவருளாலும், திருப்பெருந்துறை உறை அருள்மிகு சிவயோக நாயகி சமேத ஆத்மநாதர் திருவருளாலும், எனது இஷ்ட தெய்வமான ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீனிவாசப் பெருமாள் திருவருளாலும், எனது மானசீக ஆச்சாரியர்களான ஸ்ரீபெரும்புதூர் ராமானுசர் மற்றும் கூரத்தாழ்வான் பேரருளாலும், சமயக்குரவர்கள் நால்வர் திருவருளாலும், அறுபத்து மூவர் திருவருளாலும், தேவகோட்டை நகரில் எனது பிறந்த வீடான, தர்மத்திற்கு பெயர் பெற்று விளங்கும் அரு. லெ. வீட்டின் எனது ஐயா காரைக்கால், கோவில்பத்து திருத்தெளிச்சேரி பார்வதீஸ்வரர் சுவாமி கோவில் திருப்பணி செய்த **SV.RM.AR. ராமனாதன் செட்டியார்**, திருப்புனவாசல் கோவில் திருப்பணிக் குடும்பத்தில் பிறந்த எனது அப்பத்தா **RM. விசாலாட்சி ஆச்சி**, எனது ஆயா வீட்டு பாட்டையாவும், மாயவரம் அபயாம்பிகை கோவில் திருப்பணி செய்தவருமான, தேவகோட்டை வெ. வீட்டைச் சேர்ந்த வீரப்ப சுவாமிகள் ஆசியாலும், எனது ஆயா வீட்டு ஐயா வெத்தபெருமாள் செட்டியாரின் தாயாரும், எனது தாயார் மீனாட்சி ஆச்சியின் அப்பத்தாவுமாகிய கண்டனூர் மீனாட்சி பாட்டியின் ஆசியாலும், எனது தகப்பனார் தெய்வத்திரு. **AR.RM.AR. அருணாச்சலம் செட்டியார்** மற்றும் என்னை எந்நாளும் காத்து நிற்கும் தெய்வமான எனது பெரியதாயார் தேவகோட்டை **AR. சௌந்தரம் ஆச்சி** ஆசியாலும், எனது பாசத்திற்குரிய தாயார் திருமதி. **AR. மீனாட்சி ஆச்சி** அவர்களின் ஆசியாலும் விஜய வருடம் மார்கழி மாதம் 17ம் தேதி 01-01-2014 புதன்கிழமை அன்று 2014 ஆங்கிலப் புத்தாண்டு நன்னாளை முன்னிட்டு எனது இறைத்தொண்டின் ஓர் அங்கமாக **"சிவனருளே சிந்தித்த அடியார்கள் - 63 நாயன்மார்கள் 9 தொகையடியார்கள்"** நூல் நேர்த்தியாக அமைந்து உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த நூல் முதல் முதலாக ஆன்மிக அன்பர்கள் பயனுறும் பொருட்டு 23-04-2013 எனது தாயார் **AR. மீனாட்சி ஆச்சி**யின் **74-வது** பிறந்த நாளை முன்னிட்டு **சிறிய நூலாக 10,000 பிரதிகள்** அழகிய வண்ணப் புத்தகமாக வெளிவந்து சிவனடியார்கள் உள்ளத்தைக் கவர்ந்தது. இதை பெரிய நூலாக வெளியிட வேண்டும் என்று என் உள்ளத்தில் இறைவன் உணர்த்திய காரணத்தால் மேலும் பெரிய நூலாக 10,000 பிரதிகள் **07-07-2013 ஞாயிற்றுக்கிழமை அன்று புதுச்சேரியில் திருவாதவூரர் சொல்ல, அழகிய திருச்சிற்றம்பலமுடையான் கரம் வருந்த எழுதிய தெய்வ நூலான திருவாசக மூல**

உ

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை ஓம் சிவாய நம :

ஓலைச்சுவடி பாதுகாக்கப்பட்டு வரும் பல சித்தர்கள் வாழும் ஆன்மிக பூமியான புதுச்சேரி அம்பலத்தடையார் மடத்தில் வெளியிடப்பட்டது. இப்போது ஆன்மிக அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நமது சிவனடியார்களின் பெருமை தமிழ்மொழியில் மட்டுமல்லாது ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிட்டு உலகத்தோர் அனைவரும் நமது **"சிவனருளே சிந்தித்த அடியார்கள் - 63 நாயன்மார்கள் 9 தொகையடியார்கள்"** பற்றி தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த நூல் 10,000 பிரதிகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளது ஈசனின் பெரும் கருணையே ஆகும். இந்த நூலில் இடம்பெற்றுள்ள உயிரோட்டம் உள்ள ஓவியங்களை வரைந்த ஓவியர் **சிவத்திரு. S. மாலையப்பன்** அவர்களுக்கும், இந்த ஓவியங்களை பெரும் பொருட் செலவில் பாளையங்கோட்டை திருச்சிற்றம்பல அறக்கட்டளை உறுப்பினர்கள் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அருள்தரும் ஸ்ரீ கோமதி அம்பாள் சமேத அருள்மிகு ஸ்ரீ திரிபுராந்தீசுவரர் திருக்கோவிலில் 18-09-2005 ஞாயிற்றுக்கிழமை அன்று வடிவமைத்து, சாரதா கல்லூரி நிர்வாகி ஸ்ரீமத் சங்கரானந்த மகராஜ் அவர்கள் முன்னிலையில், வள்ளியூர் சாமியார் பொத்தை ஸ்ரீமுத்துகிருஷ்ண சுவாமி மிஷன் நிர்வாகி பூஜ்யஸ்ரீ மாதாஜி வித்தம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்ட அடியவர் அறுபத்து மூவரின் வரலாற்று வண்ண ஓவியங்களின் தொகுப்பு மலரை எங்கள் அறக்கட்டளை சார்பாக வெளியிட பெரியமனதுடன் அனுமதி தந்த **பாளையங்கோட்டை திருச்சிற்றம்பல அறக்கட்டளை உறுப்பினர்களுக்கும், குறிப்பாக "சிவா.** இந்த நூல் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வந்தால் உலகெங்கும் உள்ள அன்பர்கள் அனைவரும் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்" என்று எனக்கு அன்பு வேண்டுகோள்விடுத்து மேலும் ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் சென்னையை சேர்ந்த அன்பர் **திரு. R.G. ராஜாராம்** (போன் : 94458 68190) மற்றும் நெல்லையை சேர்ந்த வழக்கறிஞர் **திரு. பார்த்தசாரதி** (போன் : 94434 46316) ஆகிய இருவரிடம் ஆங்கில மொழிபெயர்ப்புகளை வாங்கிக் கொடுத்து எனக்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுத்த பாளையங்கோட்டை திருச்சிற்றம்பல அறக்கட்டளை உறுப்பினர் **சிவத்திரு. என். தியாகராஜன்** (போன் : 94423 78427, 93452 88427) அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் www.youtube.com என்னும் இணையதளத்தில் சென்று 63 Nayanmars Pictures Opening Function Palayamkottai Nellai Part - 1 of 7 என்று டைப் செய்து 7 பகுதிகளாக உள்ள பாளையங்கோட்டை படத்திறப்பு விழா நிகழ்ச்சி பதிவினை இணையதளத்தில் கண்டு மகிழலாம் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈசன் பெருமையைப் பேசுங்கள், அவரது அடியார்கள் பெருமையைப் பறைசாற்றுங்கள் மறுபிறப்பில்லாப் பெருவாழ்வு கிட்டும் என்பதில் ஐயமில்லை. எவ்வளவு பொருள் இருந்தாலும் ஆன்மிக நூல்களை படிப்பதிலோ வெளியிடுவதிலோ கிடைக்கும் இன்பம் அந்தப் பொருளை மிஞ்சியதாகும். திருவிளையாடல் நடத்தி நம்மைச் சோதிக்கின்ற இறைவன் நம்மை ஊழ்வினையில் இருந்து விடுவித்துக் காக்கவே அத்தகைய சோதனைகளைத் தருகின்றான். எவ்வளவு சோதனைகள் வரும் பொழுதும் அதனை இறைவன் திருவடியில் சமர்ப்பித்து நாம் இறைவனை வழிபட்டால் நாம் அந்தத் துன்பங்களில் இருந்து விடுபட வழிவகைகளை அவனே காட்டுவான். இது நமது நாயன்மார்கள் காலத்திலும் சரி, இன்றுள்ள சராசரி மனிதனின் வாழ்விலும் சரி, நாம் கண்கூடாகக் கண்ட உண்மையாகும். நம்மை ஆட்கொள்ளவே இறைவன் சோதனைகளை

தருகின்றான் என்று எண்ணி இறைவனை நிந்தனை செய்யாது, அவரை வழிபட்டு நமது முயற்சிகளையும் விடாது மேற்கொண்டால் எத்தகைய தோல்வியையும் தவிர்க்க முடியும். நான் எனது வாழ்வில் சந்தித்த சோதனைகளை பார்த்த இந்த உலகம் 1994-ம் ஆண்டில் நான் உயிர் வாழ்வேனா? என்று என்னைப் பற்றி சந்தேகம் கொண்டது. என்னைப் பற்றி நன்கு அறிந்த மதுரை நண்பர்களுக்கும் தேவகோட்டை நகரத்தார் பெரு மக்களுக்கும் மற்றும் பல ஊர்களில் வாழும் நண்பர்கள் பலபேருக்கும் இது தெரியும். ஆனால் நான் அத்தகைய சோதனைகளில் இருந்து வெளிவந்து இன்றும் அன்பர்களுக்கு பயன்படும் வகையில் என்னை வாழவைத்தது ஈசனின் பெருங்கருணையும் எனது முன்னோர்களின் தவப்பயனும், எனது தகப்பனார் தெய்வத்திரு. AR.RM.AR. அருணாச்சலம் செட்டியார் மற்றும் என்னை எந்நாளும் காத்து நிற்கும் தெய்வமான எனது பெரியதாயார் தேவகோட்டை AR. சௌந்தரம் ஆச்சி ஆசியாலும், எனக்கு தைரியமும், தன்னம்பிக்கையும் கொடுத்து இன்றும் எனக்கு எல்லா முயற்சிகளிலும் ஊக்கமும், ஆக்கமும் கொடுத்து என்னுடன் வாழ்ந்து கொண்டு இருக்கும் எனது அன்பு தாயார் AR. மீனாட்சி ஆச்சி யின் பாசத்தாலும் பிரார்த்தனையாலும் மற்றும் ஜாதி, மதங்கள் பாராது எனக்காக பிரார்த்தனை செய்த ஆயிரக்கணக்கான அன்பர்களின் பிரார்த்தனை பலனுமே ஆகும். ஈசன் கருணையே என்னைக் காப்பாற்றி இந்த 2014-ம் ஆண்டிலும் பல ஆன்மிக பணிகளை செய்ய வைத்தது என்றால் அது மிகை அல்ல. எனவே ஈசனை வணங்குங்கள் ! தோஷங்கள் விலகும் ! ஈசன் கழலடி பற்ற முடியும் ! இறைவன் கழலடி பற்றுவதே மனித வாழ்வின் நோக்கமாகும்.

"சிவனருளே சிந்திக்கும் அடியவர் பெருமை" பெரியது என்ற ஔவையார் அருளிய
பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய், பெரியது பெரியது புவனம் பெரியது, புவனமோ நான்முகன் படைப்பு,
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன், கரிய மாலோ அலைகடல் துயின்றோன்.
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம், குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன், கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம், அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்,
உமையோ இறைவன் பாகத்து ஒடுக்கம், இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே !

என்ற பாடலின் படி முழு முதல்வன் ஆகிய சிவபெருமான் தன் பெருமையைப் பறைசாற்றுவதைவிட தன்னை அன்றாடம் தொழுது வணங்கி, தொண்டுகள் புரிந்து, பாடிப் பரவி பரவசம் அடைந்த அடியார்களின் புகழைப் போற்றுவதையே பெரிதும் விரும்புவார். எனவே தான் தொண்டர் பெருமைகளை உணர்த்தும் அழகிய வண்ண ஓவியங்கள் கொண்ட இந்த நூல் மீண்டும் மீண்டும் அன்பர்கள் வேண்டுகோளுக்கு இணங்க வெளியிடப்படுகின்றது. சைவ நெறி தழைக்கட்டும் !, அன்பும், அருளும், எங்கும் நிலைக்கட்டும் ! தனக்காக மட்டும் வாழ்வது அல்ல வாழ்க்கை ! பிறருக்காகவும் வாழ வேண்டும் என்பது தான் மனித வாழ்வின் நோக்கமாக இருக்க வேண்டும் ! எனது மானசீக ஆசான் முனைவர் டாக்டர் வ.சுப. மாணிக்கனார் அவர்களுடைய பாடல்வரிகள் தான் நான் எனது வாழ்க்கை தத்துவமாக எடுத்து கொண்ட நல்முத்துக்கள் ! ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடிக்க வேண்டிய முனைவர் டாக்டர் வ.சுப. மாணிக்கனார் அவர்கள் எழுதிய வாழ்க்கை தத்துவத்தைத் தெரிவிக்கும் பாடலை அனைவரும் தங்கள் லட்சியமாகக் கொண்டு வாழ வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

உ

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை ஓம் சிவாய நம :

2/3

நல்லாவின் பால்முழுதும் கன்றுக்கில்லை
நறும்பூவின் மணம் முழுதும் சோலைக்கில்லை
நெல்லாகும் கதிர்முழுதும் நிலத்துக்கில்லை
நிறைகின்ற நீர்முழுதும் குளத்துக்கில்லை
பல்லாரும் கனிமுழுதும் மரத்துக்கில்லை
பண்ணரம்பின் இசைமுழுதும் யாழுக்கில்லை
எல்லாமே பிறர்க்குழைக்கக் காணுகின்றேன்
என்வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும்! வேண்டும்!

நன்றி : டாக்டர் வ.சுப. மாணிக்கம்

மேலும் 64 சிவமூர்த்திகளின் வண்ணப்படங்கள் மற்றும் சிவனடியார் (63 நாயன்மார்) பாடல்களை www.youtube.com என்னும் இணையதளத்தில் சென்று 64 FORMS OF LORD SHIVA என்றும் 63 NAYANMAR SONGS - Thillai Vaazh Anthanar and 63 Nayanmar Songs - Pamban Swamigal Songs என்றும் Devotional Dolphin என்றும் டைப் செய்து ஏராளமான பக்தி பாடல்களைப் பார்த்து இறையருள் பெற கேட்டுக்கொள்கிறோம்.

இந்த நூலில் எழுத்துப் பிழைகளோ பொருள் குறைகளோ இருப்பின் தயவுசெய்து அடியார்கள் எங்கள் பிழைகளை மன்னித்து எங்களுக்கு ஒரு கடிதத்தில் குறைகளை குறிப்பிட்டு எழுதி அனுப்பினால் அடுத்த பிரதியில் அந்த தவறுகள் நிறைவு செய்யப்பட உதவியாக இருக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துகொள்கிறோம். எங்கள் டால்ஃபின் பள்ளியின் சார்பாகவும் தேவகோட்டை டால்ஃபின் ராமனாதன் ஆன்மிக அறக்கட்டளையின் சார்பாகவும் இலவசமாக வெளியிடப்பட்டுள்ள இந்த நூலைப் படித்து சிவனருளே சிந்திக்கும் சீர்மிகு அடியார்கள் அனைவரும் இறைவனின் அருளைப் பெற வேண்டுமாய் எல்லாம் வல்ல ஸ்ரீ காசி விஸ்வநாதர், ஸ்ரீ காசி விசாலாட்சி, ஸ்ரீ காசி கால பைரவர், ஸ்ரீ காசி அன்னபூரணி திருவடிகளைப் போற்றிப் பிரார்த்திக்கின்றேன்.

திருச்சிற்றம்பலம்

இறைப்பணியில் ...



AR. ராமனாதன்

தேவகோட்டை அரு.லெ.வீடு டால்ஃபின் AR. ராமனாதன்,
தலைவர் மற்றும் நிறுவனர், தேவகோட்டை
டால்ஃபின் ராமனாதன் தமிழ்ப்பணி மற்றும்
ஆன்மிகப்பணி அறக்கட்டளை, மதுரை - 10.
தாளாளர், டால்ஃபின் பள்ளி, மதுரை - 10.
Ph – 93451 69639, 99439 25200
Email: dolphinschool2009@gmail.com
Web: www.devakottaidolphinramanathan.com

Dolphin Public School

உ

Shri Mandhiramurthi Vinayagar Thunai

Om Sivaya Namaha !

THOUGHTS OF PREFACE

Dear Readers,

First I would like to offer my sincere prayers to Devakottai Sri Manthiramurthi Vinayagar, My family deity, Ilankudi Shri Poornapushkalambal Samedha Shri Pakarchala Moorthy Iyanayar, My Nagarathar Temple Iluppaikudi Soundaranayaki Ambal Samedha Shri Thanthondri Eswarar, Shri Bairava Moorthy, and also to my blood relatives shri SV.RM.AR. Ramanathan Chettiar, my grandfather born in the famous family of Devakottai, AR.L. House, who did the kumbabishegam of, Thiruthelicherry, Shri Parwathiswaraswamy Devasthanam, my Grandmother Visalakshi Achi, born in the famous family of AL.SP.PL. family of Devakottai who have done the kumbabishegam of Thiruppunavasal Temple, my great grandfather Veerappa Swamigal of VP House Devakottai who had done the Kumbabishegam of Mayavaram Abayambigai Temple, with a Huge Amount of 22 Lakhs in 1922 and became a saint after taking Dikshai at Thiruvavudhurai Adheenam, my great grandmother Mrs. Meenakshi Achi, the mother of VP. Pethaperumal Chettiar, My beloved father late. Shri AR.RM.AR. Arunachalam Chettiar, my beloved aunty late Mrs. AR. Soundaram Achi. With their blessings, I was able to present this colourful book. I also express my sincere thanks to my lovable mother Mrs. AR. Meenakshi Achi for her encouraging words whenever I feel depressed and without whom I could not have offered a small part to the divine community feel happy to say that this book is the first of this type on specific topic with beautiful pictures along with short stories in both English & Tamil Languages meant for all the readers particularly the youngsters under the title of **"Sivanarulae Sinthitha Adiyargal"** (63 Nayanmars and 9 Thogaiyadiyars) released in connection with the 2014 English New year on 01-01-2014.

My thanks to the Shri K. Malaiyappan, Senior Artist, who beautifully painted the pictures with the help of Tirunelveli, Palayamkottai Thiruchitrambala Arakkattalai members. The CD containing pictures was given to me by Sivathiru N. Thiyagarajan (9345288427, 9442378427) with the request to publish in a book format. Again due to the Lord's intuition in my mind to bring out the book both in Tamil and English translation with the help of Mr. G. Rajaraman (9445868190) Chennai and Advocate Mr. Parthasarathy (94434 46316) Nellai, the book has come out fine with the blessings of Lord Shiva for benefit of Younger generation. The picture opening function on 18-09-2005 can also be viewed through website (www.youtube.com) by clicking 63 Nayanmars pictures opening function palayamkottai Nellai Part 1 to 7.

While undergoing humility due to the sins committed in previous births is to forsake you by testifying you in many forms by Him. He paves the way to redeem from unceasing pain by prostrating oneself to him for his compassion & mercy. While God tests you, behold yourself, then if it happens to undergo ordeals, showered in many forms let not blemish His image & supremacy. By analyzing the period from Nayanmars to present period of human life, we perceive this to be true.

Worship God & have constant effort in any field, you will not be deceived. I doubted my integrity in the year 1994 upon my life & underwent awful ordeals. My companions, friends in various places & folks of Nagarathar of Devakottai were well aware of this. But I emerged out from these ordeals owing to the benevolence of God & my ancestor's blessings, my well-wishers prayers I could steer ahead in life.

My father late AR.RM.AR. Arunachalam Chettiar & my aunt (My step Mother) Late Devakottai Soundaram Achi's blessings gave me perseverance & courage to overcome all my afflictions. Without any caste, creed or religion my

உ

Shri Mandhiramurthi Vinayagar Thunai

Om Sivaya Namaha !

thousands of my friends prayers & my dearest mother AR. Meenakshi Achi's affection & blessings made myself to steadfast in my spiritual work even in 2014. So our main objective is to hold His feet.

"Sivanarule Sinthickum Adiyavar Perumai" Periyathu Endra Poetry Sung by Avvaiyar

Periyathu Ketkin Eridhaval Velaai, Periyathuperiyathu Puvanam Periyathu, Puvanamo Naanmugan Padaippu, (Devotee thinks of Siva as great, cosmos created by Lord Siva, as per Avvaiyar, great, greater is cosmos)

Naanmugan Kariyammal Unthiyil Vanthen, (Lord Brama came from the Lord Vishnu)

Kariya Maalo Alaikadal Thuyindran, (Vishnu's Bed is a very Big Ocean)

Alaikadal Kurumuni Angaiyil Adackam, (Kurumuni Agasthiyar vessel the control of Big Ocean)

Kurumuniyo Kalasathir Piranthon, (Kurumuni Agasthiyar was born in a vessel a small mud pot)

Kalasomo Puviyir Siruman (The Vessel is the small part of the Cosmos)

Puviyo Aravinucku Oruthalai Paaram, Aravo Umaiyaval Siruviral Mothiram,
Umaiyo Iraivan Paagathu Odukkam, Iraivaro Thondar Ullathu Odukkam
Thondartham Perumai Sollavum Perithea!

The Sun God's one face is cosmos, God moon is ring for ring finger to the Goddess Parvathi. Parvathi, part of Lord Siva. Lord Shiva lives in hearts of devotees, so the devotees fame is more superior than Lord, So even Lord loves praising His devotees rather than praising Him.

Based on our past Madurai Kamarajar University Vice Chancellor Dr. Va. Supha Manikam's philosophical idea, which I have take my life style, which exposes that man must not live for himself but also should live for others. This is the true meaning of one's birth.

As per Dr. Va. Supha Manickam **"Vaazhckai Thathuvam"** (Life Philosophy)

Nallavin Paalmuludhum Kandruckillai (Cow's milk is not for the calf alone)
Narumpoovin Manam Muludhum Solaickillai (Flower's Fragrance is not for the Farm alone)
Nellagum Kathirmuludhum Nilathuckillai (Entire Paddy grown is not for the cultivating paddy field alone)
Niraigindra Neermuludhum Kulathuckillai (The Filled water is not for the pond alone)
Pallarum Kanimuludhum Marathuckillai (The Fruits grown are not for the trees alone)
Pannarambin Isaimuludhum Yaazhuckillai (The beautiful Music is not for the Veena alone)
Ellamea Pirarckuzhaicka Kannuginrean (All the above live for others)
Envaazhvum Pirarckuzhaicka Vendum ! Vendum ! (My life is also for others livelihood)

I request you all to take Dr. Va. Supha. Manickams song "Vaazhkai Thathuvam" (Life Philosophy) as your life style. You will come to know the real meaning of your birth. If there are any mistakes, please do write to us, so that we could rectify it in our next publication. May Lord Shri Kasi Viswanathan, Shri Kasi Visalakshi, Shri Kasi Kala Bairavar, Shri Kasi Annapoorani shower their blesssings over all the Shivan Adiyars.



Dolphin AR. RAMANATHAN, Correspondent, Dolphin School, Madurai - 10, Tamil Nadu, India
Ph. No. : 93451 69639, 99439 25200, 0452 - 2387787, E-mail : dolphinschool2009@gmail.com
Web : www.devakottaidolphinramanathan.com


உ

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை ஓம் சிவாய நம :



மாணிக்கவாசகர் திருவடி தீட்சை

SAINT MANIKKAVASAGAR BLESSED BY LORD SHIVA'S GLITTERING FEET





1. தில்லைவாழ் அந்தணர்கள்
(சித்திரை - முதல் நாள்)

சிதம்பரத்தில் நடராஜப் பெருமானுக்குத் திருத்தொண்டு புரிந்தவர்கள். இவர்கள் மூவாயிரம் பேரும் நான்கு வேதங்களையும் ஆறு சாஸ்திரங்களையும் முறையாகக் கற்று அதன்படியே நடந்து பிறருக்குத் தெளிவாகக் கற்றுக்கொடுப்பதிலும் சிறந்து விளங்கினர். இவர்கள் சைவ நெறிப்படி திருத்தொண்டு புரிந்து வந்ததால் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருத்தொண்டர் தொகையில் "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று சிவபெருமான் முதலடி எடுத்துக் கொடுத்த சிறப்பைப் பெற்றவர்கள். முறையான சிவவழிபாட்டிற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் தில்லைவாழ் அந்தணர்கள்.

1. THILLAIVAZH ANTHANARGAL
(The Brahmins of Thillai) - (Chithirai - the First Day)

They are the ones who performed the eternal service to The Lord Nataraja at Chidambaram. These three thousands have acquired the knowledge of Four Vedhas and Six Sastras formally and followed it in life accordingly and also excelled in imparting these to others explicitly. As they had been performing meritorious service according to the saivaite tradition they had the eminence of being addressed as "Thillaivazh Anthanartham Adiyarkkum adiyen" (Devotee of Devotees of Brahmins of Thillai-Chidambaram) by Lord Siva providing first line to Sundaramoorthy Nayanar's "Thiruthondarthogair". The Brahmins of Thillai are the forerunners to the tenetful worship of Lord Shiva.






௨. திருநீலகண்ட நாயனார்
(தை - விசாகம்)

சிதம்பரத்தில் அவதரித்த திருநீலகண்ட நாயனார் விலைமாதரிடம் சென்றதை அறிந்து அவரது மனைவி இறைவன் மேல் ஆணையிட்டு ஒருவரையொருவர் தொடாமல் வாழ்ந்தனர். அவர்களை ஒன்று சேர்க்க நினைத்த சிவபெருமான் சிவனடியாராக வந்து திருவோடு ஒன்றைக் கொடுத்து பின்னர் வந்து பெற்றுக்கொள்வதாகச் சொல்லிச் சென்றார். இறைவன் அருளால் அந்தத் திருவோடு மறைந்து விடமீண்டும் வந்த சிவனடியாரிடம் மறைந்து விட்டதாகச் சொல்ல தாங்கள் சொல்வது உண்மையெனில் தம்பதிகள் கரம்பற்றி குளத்தில் மூழ்கி எழுந்திருக்க வேண்டும் என்று அவர் கூறினார். தம்பதிகள் ஒரு மூங்கில் துண்டின் இருமுனைகளைப் பிடித்துக் கொண்டு மூழ்கக் கைகளைப் பிடித்துக் கொண்டு தான் மூழ்க வேண்டும் என்று சிவனடியார் கூற அவர்களும் அடியாரிடம் மறைப்பதற்கு முடியாது என்று கைப்பற்றி மூழ்கி எழும் போது முதுமை மாறி இளமைக் கோலத்துடன் எழுந்தனர். ரிஷப வாகனத்தில் தேவியுடன் சிவபெருமான் காட்சி அருளினார்.

2. THIRUNEELAKANDA NAYANAR
(Tamil Month of Thai - Visakam)

Thiruneelakanda Nayanar was born (Advented) at Chidambaram and when his wife came to know that he had gone to a prostitute, she pledged on the Lord that they should desist from touching each other and lived accordingly. The Lord Shiva wished to reunite them and came in the guise of a Devotee of Siva (Devotee of Lord Shiva) and handed over them an alms Vessel (Thiruvodu) to keep it and told them he would collect it later and went away. By the grace of The Lord the Thiruvodu had disappeared and at the return of the Devotee of Siva (The Devotee of Lord Shiva) they told him about the disappearance. He (The Devotee of Shiva) told them that the couple had to dip into the pond holding their (each other's) hands, if it was true. The couple tried to dip holding a bamboo stick on the end at their respective side. The Devotee of Siva insisted that they should do it holding their hands together. They also had done so as they cannot hide anything from the Devotee of Siva and when they raised out of water they had turned into their youthfulness from the oldness. The Lord Shiva gave them Darshan with Devi on the "Rishaba Vahanam".






3. இயற்பகை நாயனார்
(மார்கழி - உத்திரம்)

காவிரிப்பூம்பட்டினத்தில் அவதரித்த இயற்பகை நாயனார் சிவனடியார்களுக்கு எதையும் மறுக்காமல் கொடுக்கும் வண்ணம் வாழ்ந்தார். அவருடைய சேவையை உலகுக்கு உணர்த்த, இறைவன் சிவனடியார் போல மாறுவேடம் கொண்டு, இயற்பகையாரிடம் அவர் மனைவியைக் கேட்க அவரும் மறுக்காமல் சிவனடியாரிடம் தன் மனைவியை ஒப்படைத்தார். இதனை எதிர்த்த ஊர் மக்களையும் வெட்டி வீழ்த்தி, காவலாகச் சென்றார். சிவனடியார் நாங்கள் இனி பத்திரமாகச் சென்று விடுவோம் என்று கூற, நாயனாரும் திரும்பிக்கூட பார்க்காமல் நடந்தார். அவரின் பக்தி உள்ளத்தைப் புரிந்து, சிவனடியார் நாயனாரின் பெயரைச் சொல்லி அழைக்க அவரும் திரும்பிப் பார்த்தார். தன் மனைவி மட்டும் நிற்க சிவபெருமான் ரிஷப வாகனத்தில் தேவியுடன் காட்சி தந்து அருளினார்.

3. EYARPAGAI NAYANAR
(Margazhi - Uthiram)

Eyarpagai Nayanar took his Holy birth at Kaveripoompattinam and lived a life that he would give away everything to Devotee of Siva without a word of refusal. The Lord wished to exhibit his services to the world and came in the guise of Devotee of Siva asked Eyarpagai Nayanar to give his wife. He gave away his wife to the Devotee of Siva without any refusal. He accompanied as guard with him, cutting down the village folk who opposed it. When the Devotee of Siva told him that they would make their way safely thereafter the Nayanar returned even without looking at them back. On seeing his devotion, Devotee of Siva called the Nayanar by his name and he looked back. His wife alone was standing there and the Lord Shiva with Devi graced him with Darshan on "Rishaba Vahanam".







4. இளையான்குடி மாற நாயனார்
(ஆவணி - மகம்)

பரமக்குடியிலிருந்து காளையார் கோவில் செல்லும் வழியில் உள்ள இளையான்குடி எனும் ஊரில் அவதரித்த இளையான் குடிமாற நாயனார் வறுமையுற்ற நிலையிலும், சிவனடியாரை உபசரித்து போற்றுபவர் என்பதை உலகுக்கு உணர்த்த எண்ணிய ஈசன் தன் அருளால் நாயனாரை மிகவும் வறுமையுறச் செய்தார். இளையான்குடியாரிடம் மழை பெய்யும் நள்ளிரவில் இறைவன் சிவனடியார் வேடமிட்டு பசியென்று வந்தார். வறுமையில் வாடிய நாயனார், பகலில் விதைத்த நெல்லை எடுத்து மனைவியிடம் கொடுக்க மனைவியோ நெல்லைக் குத்தி அரிசியாக்கி வீட்டுக்கூரையிலுள்ள வரிச்சுக் கொம்புகளை முறித்து விறகாகப் பயன்படுத்தி, கொல்லைப்புற காய்களைப் பறித்து உணவு தயார் செய்தார். அதுவரை படுத்துக் தூங்கிய அடியாரை உணவுண்ண அழைக்க, சிவனடியார் எழும்போது சிவபெருமானாகத் தோன்றி, தம்பதிகளுக்கு, காட்சி தந்து அருளினார்.

4. ILAYANKUDI MARA NAYANAR
(Aavani - Magam)

Ilaynankudi Mara Nayanar was born in a place called Ilayankudi, which is on the way to Kalayar Koil from Paramakudi and he was one who patronised the Devotees of Siva, eventhough he was reeling under poverty and in order to show his service to the world the Lord made him poorer by His benign Act. On one rainy night the Lord came to Ilayankudi Nayanar to seek alms for His hunger, under the guise of a Devotee of Siva. Poverty stricken Nayanar collected paddy sown in the field during day and gave that to his wife, the wife pounded the paddy into rice, pulled out some sticks from the roof and used them as firewood, collected vegetables from the kitchen garden and prepared food. When they invited the Devotee for dinner, the Devotee when woke up appeared as Lord Siva and blessed the couple gracefully.






5. மெய்ப்பொருள் நாயனார்
(கார்த்திகை - உத்திரம்)

திருக்கோவிலூரில் அவதரித்து அவ்வூரை ஆட்சி செய்த மெய்ப்பொருள் நாயனார் ஒரு சிவபக்தர். அடுத்த நாட்டு மன்னனான முத்தநாதன் மெய்பொருளாரை வஞ்சகமாக வீழ்த்த எண்ணி, சிவனடியார் போல வேடமிட்டு உடைவாளை ஒரு புத்தகக்கட்டுக்குள் வைத்துக் கொண்டு மெய்பொருளாரைச் சந்தித்தார். அவரும் அடியாரை வரவேற்க அடியார் தான் சிவபெருமான் ஓதிய ஆகம நூலை வாசிக்க நீங்கள் கேட்க வேண்டுமென்று கூற, மெய்பொருளாரும் பணிவுடன், படியுங்கள் என்றார். அச்சமயத்தில் சிவனடியார் வேடம் கொண்ட முத்தநாதன் மெய்பொருளாரைக் குத்தி வீழ்த்த, முத்தநாதனைக் கொல்ல வந்த காவலர்களைத் தடுத்து அடியார் வேடத்தில் வந்த அவரைக் கொல்வது பாவம் என்று கூறி ஊர் எல்லை வரை கொண்டுவிடச் சொன்னார். ஊர் எல்லை வரை அனுப்பிய செய்தி கேட்ட பின் மெய்பொருளார் உயிர் போயிற்று. சிவனடியார்களிடம் வைத்த பக்தியைக் கண்டு வியந்து மெய்பொருளாருக்குச் சிவபெருமான் முக்தி கொடுத்தார்.

5. MEIPPORUL NAYANAR
(Karthigai - Uthiram)

Meipporul Nayanar was born at Thirukovilur and ruled Thirukovilur. He was a devotee of Lord Shiva. The ruler of neighbouring country Muthanathan wished to bring down Meipporul Nayanar by deceit, met him under the guise of a Devotee of Siva keeping a sword in the bundle of books. He (Nayanar) welcomed the Adiyar and the Adiyar requested him (Nayanar) to listen to the Agamas rendered by Lord Shiva as he would chant it. He (Nayanar) also obliged. Then Muthanathan who was under the guise of Devotee of Siva brought down Meipporular by stabbing. Nayanar, then, prevented the guards who rushed towards Muthanathan to kill him and told them that was a sin to kill him who was in the guise of Adiyar and ordered them to accompany him upto the border of the country. His (Nayanar's) life came to an end only after hearing that he was accompanied until the border of the country. Astonished on seeing his devotion to the Devotee of Siva, The Lord Shiva blessed him (Meipporul Nayanar) with Moksha (Bliss.)





6. விறன்மிண்ட நாயனார்
(சித்திரை - திருவாதிரை)

கேரள மாநிலம் கொல்லத்திற்கு 30 கி.மீ. தொலைவிலுள்ள திருச்செங்குன்றூரில் அவதரித்த விறன்மிண்ட நாயனார் சிவனடியார்களிடம் பேரன்பு கொண்டவர். சிவனடியார்களை வணங்கியபிறகுதான் சிவபெருமானை வணங்கச் செல்லும் விறன்மிண்டர், திருவாரூர் தியாகராச பெருமானைத் தரிசனம் செய்து கொண்டிருக்கும் சமயத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் அங்கிருந்த சிவனடியார்களை வணங்காமல் செல்வதைக் கண்டு, மனம் வருந்தினார். சுந்தரமூர்த்தி நாயனாரிடம் சென்று, “அடியார்களை வணங்காமல் செல்கிறவன் சிவனடியார்களுக்குப் புறம்பானவன். அதுபோல சிவபெருமானுக்கும் புறம்பானவன்” என்று கூறினார். விறன்மிண்டர் அடியார்களிடம் கொண்ட பக்தியினைக் கண்டு வியந்த சுந்தரமூர்த்தி நாயனார், திருப்பதிகத்தினைப் பாடித் திருக்கூட்டத்தை வணங்கினார். சைவ நெறியைப் பாதுகாத்து வந்த விறன்மிண்டர், திருவருளால் கணநாயகர் என்னும் நிலையைப் பெற்றார் விறன்மிண்ட நாயனாராகப் போற்றப்பட்டார்.

6. VIRANMINDA NAYANAR
(Chithirai - Thiruvathirai)

Born at Thiruchenkundroor 30 Km. away from Kollam, Kerala, Viranminda Nayanar had a great affection towards Devotee of Siva. He used to worship Lord Shiva only after worshipping the Devotee of Siva. When he was having a darshan of Thiagaraja Peruman of Thiruvaroor, he saw Sundara Moorthy Nayanar going without worshipping the Devotee of Siva there and felt sorry. He went to Sundaramoorthy Nayanar and said that, 'those who do not worship the Devotee of Siva are against them and so do with Lord Shiva'. Sundaramoorthy Nayanar was astonished by the devotion of Viranminda Nayanar on Devotees of Siva and worshipped the holy mass there by rendering the Thiruppathigam. Viranminda Nayanar fortified the Saiva tenets (Saiva Neri) and attained a state of Gana Nayanar by the grace of Almighty. He is revered as Viranminda Nayanar.







7. அமர்நீதி நாயனார்
(ஆனி - பூரம்)

கும்பகோணத்திற்கு அருகில் உள்ள பழையாறை என்னும் ஊரில் அவதரித்த அமர்நீதி நாயனாரின் தியாகப் பெருமையை உணர்ந்த, ஈசன் பிரம்மச்சாரியைப் போல் வேடமிட்டு ஒரு கொம்பில் இரண்டு கோவணங்களோடு அமர்நீதியாரிடம் வந்து ஒரு கோவணத்தைக் கொடுத்து, நீராடிவிட்டு வந்து பெற்றுக் கொள்வதாகக் கூறிச் சென்றார். கோவணம் ஈசன் அருளால் மறைந்து விட, மீண்டும் வந்த அடியாரிடம் கோவணம் காணவில்லை என்று சொல்ல அதற்கு அடியார் என் கோவணத்திற்குச் சமமான மறுதட்டில் நிறைய கோவணங்களும், பொன்னும், பொருளும் வைத்தார். இறுதியில் தானும், தன் மனைவியும், மகனும் தட்டில் நிற்க தராசு சமமானது. அமர்நீதியார் தன் குடும்பத்தைச் சிவபக்திக்குத் தியாகம் செய்ததைக் கண்டு சிவபெருமான் தராசைத் தெய்வ விமானமாக்கி அக்குடும்பத்திற்கு முக்தியளித்தார்.

7. AMARNEEDHI NAYANAR
(Aani - Pooram)

Amarneedhi Nayanar was born at Palayarai near Kumbakonam and to show the value of his sacrifice the Lord came to him under the guise of a bachelor with two piece of loin clothes (Kovanam) on a holding stick. He handed over a loin cloth to Amarneedhi Nayanar to keep it and told him that he would collect it after bath and went away. The loin cloth disappeared by God's Grace and he answered the Adiyar who returned then that it was lost. For that the Adiyar demanded that he be given a loin cloth of same weight of his one. Immediately the Amarneedhi Nayanar had placed the other loin cloth of Adiyar on one plate of a balance and placed many loin clothes, gold and other things on other plate. The balance tallied only at last when he, his wife and child were on the balance plate. On seeing Amarneedhi Nayanar Sacrificing his family for the devotion of Lord Shiva, the Lord gave Moksha (The bliss) to the family converting the balance into a flying vehicle of Almighty.





8. எறிபத்த நாயனார்
(மாசி - அஸ்தம்)

தற்சமயம் கரூர் என அழைக்கப்படுகின்ற கருவூரில் அவதரித்த எறிபத்த நாயனார் சிவனடியார் வழிபாட்டில் எவர் கெடுதல் செய்தாலும் அவர்களை மழுவாயுதத்தால் வெட்டி வீழ்த்தும் அளவிற்குப் பக்தி உடையவர். ஒரு நாள் கோவிலுக்குப் பூக்கொண்டு சென்ற சிவகாமியாண்டாரை அரசு யானைத் தாக்கி பூக்களைச் சிதறடித்தது. அதைக் கண்ட எறிபத்தர் யானையையும், அதனை அடக்காத பாகர்களையும் வெட்டி வீழ்த்த, செய்தியறிந்து, படையுடன் வந்த புகழ்ச்சோழ அரசர், யானை தன்னுடையது அதனால், தன்னையும் வெட்டுமாறு வாளினைக் கொடுக்க மன்னனின் பக்தியை உணர்ந்த எறிபத்தர், வாளினைப் பெற்று இந்த மன்னனுக்கு முன், நான் சாதாரணமானவன் என்று எண்ணி, தன்னை வெட்டிக் கொள்ள முயன்றார். அப்போது வானில் உம்முடைய சக்தியை உணர்த்தவே இதை நடத்தினோம் என்று அசரீரி கேட்டது. யானையும், பாகர்களும் உயிர் பெற்றனர். சிவபெருமானின் அருளால் எறிபத்த நாயனார் திருக்கயிலையில் தலைமைப் பதவி பெற்றார்.

8. YERI PATHA NAYANAR
(Masi - Astham)

Yeri Patha Nayanar was born at Karuvoor, now called as Karoor and he had the devotion of Lord Shiva to the extent that he would cut down anybody with the sword who interfered in the prayer of Devotee of Siva. On one day the Kings elephant attacked a Devotee of Siva Sivakami Andar who was carrying flowers to the temple and scattered the flowers. On seeing it Yeri Pathar cut down the elephant and its mahouts who failed to tame it. On receiving the news the King Pugal chola came there with his battalion and asked him (Yeri Pathar) kill himself for the elephant belonged to him by handing over the sword to him. On seeing the devotion of the King Yeri Pathar took the sword and tried to cut himself as he felt he was humbled before the King on account of his bakthi (devotion). At that time a divine voice was heard that "To show your devotion alone it was orchestrated by me". The elephant and the Mahouts were resurrected with life. Yeri Patha Nayanar got the chief position in Sri Kailash by the grace of Lord Shiva.




9. ஏனாதிநாத நாயனார்
(புரட்டாசி - உத்திராடம்)

நாச்சியார் கோவிலுக்கு 3 கி.மீ. அருகில் உள்ள எயினனூரில் அவதரித்த ஏனாதிநாத நாயனார் போர் வீரர்களுக்கு வாட் பயிற்சியளிக்கும் தொழில் புரிந்தார். அந்த தொழில் உரிமையைப் பெற எண்ணிய அதிசூரன் "போரில் வெற்றி பெறுபவருக்குத் தான் வாள் வித்தை கற்பிக்கும் உரிமை" என்று கூறி ஏனாதியாரைப் போருக்கு அழைத்தான். ஏனாதியார் தன்னுடைய ஒரே வாளால் அதிசூரனுடைய வீரர்களை வெட்டி வீழ்த்தினார். அதனால் நாயனாரை வஞ்சனையால் கொல்லக் கருதிய அதிசூரன் கேடயத்தால் திருநீறு பூசிய தன் நெற்றியை மறைத்துக் கொண்டு வந்து போரிடும் போது கேடயத்தை விலக்கினான். திருநீற்றினைக் கண்டதும் நாயனார் போரிடாமல் நிற்க அவனும் வாளால் குத்தினான். திருநீறணிந்தவரிடம் ஏனாதிநாத நாயனார் காட்டிய பேரன்பைக் கண்ட ஈசன் வானவெளியில் காட்சி தந்தருளினார்.

9. ENATHI NATHA NAYANAR
(Purattasi - Uthiradam)

Enathi Nayanar was born at Eyinanoor which is 3 Km. away from Natchiyar Koil and was a professional trainer of imparting swordsmanship to the army soldiers. One Athisooran was intending to grab that professional licence, called on Anathiyar to fight with him saying 'those who come out successful in the fight alone can have the licence to teach the swordsmanship'. Anathiyar had cut down the soldiers of Athisooran with a single sword of his. Hence Athisooran planned to kill Nayanar by deceit and fought with Nayanar covering his forehead which was full of sacred Ash with shield and suddenly removed it. On seeing the sacred Ash the Nayanar stood without fighting but he (Athisooran) stabbed him with sword. On seeing the extraordinary affection of Enathinathar towards the Devotees of Siva with sacred ash in their forehead, Lord Siva gave him a special appearance in the cosmos.






10. கண்ணப்ப நாயனார்
(தை - மிருகசீரிஷம்)

ஆந்திர மாநிலம், திருப்பதியில் இருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள உடுப்பூரில் அவதரித்த வேடர்குலத்தைச் சேர்ந்த திண்ணன்காளத்திமலை காளத்திநாதன் மீது பக்தி கொண்டு பூஜை செய்யும் முறை அறியாது லிங்கத்தின் மீதுள்ள வாடிய பூக்களைக் காலால் அகற்றி, வாயில் உள்ள நீரினால் அபிஷேகம் செய்து இறைச்சியைப் படைத்து தினமும் வழிபட்டு வந்தான். அவனது பக்தியை உலகுக்குணர்த்த எண்ணிய காளத்திநாதர் ஒரு நாள் திண்ணன் வரும் போது சிவலிங்கத்தின் ஒரு கண்ணில் இரத்தம் வடியச் செய்தார். துயரம் கொண்ட திண்ணன் பச்சிலை மூலிகைகள் மூலம் இரத்தத்தை நிறுத்த முடியாமல் போகவே, தன் கண்ணினைப் பெயர்த்து அப்பினான். அது நின்று மறு கண்ணில் இரத்தம் வர திண்ணன் அந்தக் கண்ணில் காலை ஊன்றி, மறு கண்ணையும் பெயர்க்க முயன்ற போது, பரமன் நில்லு கண்ணப்பா நில்லு என்று கூறி, காட்சியளித்தார். கண்களைத் தியாகம் செய்ததால் திண்ணன் அன்று முதல் கண்ணப்ப நாயனாராகப் போற்றப்பட்டார்.

10. KANNAPPA NAYANAR
(Thai - Mirugaseerisam)

Thinnan of Kalathi Malai was born at Uduppoor which is 30 KM. away from Thiruppathi, Andhra Pradesh. He belonged to the Community of hunters. He had great devotion towards Kalathi Nathan (The Lord) and did not know the tenets of Poojas (Tenets of worship). He removed the withered flowers on the Lingam with his legs and performed abhisekam with his saliva and offered the Lord animals flesh. He worshipped the Lord by this way daily. The Lord Kalathi Nathar wished to exhibit his devotion to the world and on one day the Lord made one of the eyes of Shiva Lingam to bleed when Thinnan was coming. Grieved over the bleeding he tried to stop it by using herbs which failed. Then he gauged out one of his eyes and applied it on the Lingam. The bleeding was stopped and the next eye began to bleed. He placed his leg on that eye and tried to gauge out his other eye. At that time the Lord (Paraman) said "Stop Kannappa stop" and gave him the Darshan (appearance). Thinnan was revered as Kannappa Nayanar from that day as he sacrificed his eyes.




11. குங்கிலியக்கலய நாயனார் (ஆவணி - மூலம்)

திருக்கடவூரில் அவதரித்து ஆலயத்தில் குங்கிலியத் தூபமிட்டு குங்கிலியக்கலயனாரின் திருதொண்டை உலகுக்குணர்த்த ஈசன் அவரை கொடிய வறுமையுறச் செய்தார். அவரது மனைவி, குடும்பத்திற்கு உணவு இல்லாமையால் தன் பொன் மாங்கல்யத்தைக் கழற்றிக் கொடுத்து நெல் வாங்கி வரும்படி கூறினார். வெளியே சென்ற கலயனார், தன் முன் குங்கலிய வியாபாரி எதிரே வரதாலியைக் கொடுத்தார். குங்கிலியைப் பொதியைப் பெற்று வீரட்டானம் கோவிலுக்குச் சென்று அங்கேயேத் தங்கி குங்கிலியத் தொண்டு புரிந்தார். கலயனாரின் குடும்பத் துயரைப் போக்க எண்ணி, இறைவன் ஓரிரவில் அக்குடும்பத்தில் செல்வச் செழிப்பை உண்டுபண்ணி கலயனாரை மனைவி மக்களுடன் வாழுமாறு கட்டளையிட்டார். பின்னர் திருப்பனந்தாளிலுள்ள சிவலிங்கம் உருவம் சாய்ந்திருந்ததைக் கேள்வியுற்ற கலயனார் அங்கு சென்று தன் கழுத்தில் ஒரு கயிற்றைக் கட்டி அதன் மறுமுனையை சிவலிங்கத்தில் கட்டி இழுக்க சாய்ந்திருந்த லிங்கம் நிமிர்ந்து நின்றது. இதனால் இவர் குங்கிலியக்கலய நாயனாராகப் போற்றப்பட்டார்.

11. KUNGILIAKKALAYA NAYANAR (Aavani - Moolam)

Kungiliakkalaya Nayanar was born at Tirukkadavur and was offering incense of resin to the Lord. Recognizing his service and devotion, in appreciation the Lord wanted to make it known to the World. He put him under the test of utter poverty. As they had no food for the family, his wife removed the golden mangalasutra from her neck and gave it to her husband to fetch paddy. When Kalayanar went out, he saw an incense resin merchant. He gave the mangalasutra to him and took the load of resin. Then he reached Veerattanam temple, stayed there and engaged himself in service. The Lord in order to relieve distress of the family blessed him with abundant wealth and wanted him to be with his wife and children happily. Afterwards on hearing that the Sivalinga of Tiruppananthal was slanting he went to the temple, tied up a rope on his neck and the other side on the lingam and pulled. The Sivalinga was straightened. Hence he was extolled as Kungiliakkalaya Nayanar.






12. மானக்கஞ்சாற நாயனார்
(மார்கழி - சுவாதி)

ஆனந்ததாண்டவபுரம் எனும் கஞ்சனூரில் அவதரித்த சேனாதிபதி மானக்கஞ்சாற நாயனார் பிள்ளைப்பேறு இல்லாமல் இருக்கவே மனம் வருத்தி இறைவனை வேண்டி ஒரு அழகிய பெண் குழந்தையைப் பெற்றார். அக்குழந்தையைச் சீரும் சிறப்பாக வளர்த்து ஏயர் கோன்கலிக்காம நாயனாருக்கு மணமுடிக்க ஏற்பாடு செய்தார். பொழுது விடிந்தால் திருமணம் என்ற நிலையில் அவரது பக்தியை உலகுக்கு உணர்த்த விரும்பிய சிவபெருமான் சிவனடியாராக வேடமிட்டு திருமண வீடு வந்தார். சிவனடியாரைக் கண்டதும் வணங்கிய நாயனார் “உன் மகளது தலைமுடி எம் மார்பிலே அணியக்கூடிய பஞ்சவடி என்னும் மயிர்கற்றை பூணூலாக வேண்டும்” என்றார். நாயனார் ஒரு நிமிடமும் தாமதியாது பக்கத்தில் நின்ற மகளின் அலங்கரிக்கப்பட்ட கூந்தலை அடியோடு அரிந்து சிவனடியாரிடம் கொடுக்க அதைப் பெற்ற சிவனடியார் சிவபெருமானாகத் தேவியுடன் ரிஷப வாகனத்தில் காட்சியளித்தருளினார்.

12. MANAKANCHARA NAYANAR
(Margazhi - Swauthondarthogaithi)

Senathipathi Manakanchara Nayanar was born at Kanchanoor which is called as Anantha Thandavapuram and was issueless. Grieved over that he prayed the Lord with devotion and got a beautiful girl child. He brought up that child with great care and arranged marriage with Aayer Konkalikama Nayanar. While the marriage was scheduled in the morning Lord Shiva came to the marriage house in the guise of Devotee of Siva and wanted to exhibit his devotion to the world. Nayanar worshipped the Devotee of Siva asked him" The hair (blonde) of your daughter has to be used as Panchavadi, the sacred thread made of hair, around my chest". Without hesitating, even for a minute, Nayanar had cut away the decorated hair of her daughter,. who stood nearby and handed it over to the Devotee of Siva and the Devotee of Siva received it and turned out to be Lord Shiva with Devi on Rishaba Vahanam rendering darshan (special appearance).





13. அரிவாட்டாய நாயனார்
(தை - திருவாதிரை)

திருவாரூரில் இருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் வழியில் கணமங்கலம் எனும் ஊரில் அவதரித்த அரிவாட்டாயநாயனார் சிவலிங்க வழிபாட்டை மேற்கொண்டு, தினமும் செந்நெல் அரிசி அமுதும், செங்கீரையும், மாவடுவும், படைப்பதைத் திருத்தொண்டாகச் செய்து வந்த நற்பண்பைச் சோதிக்க சிவபெருமான் அவரை வறுமையடையச் செய்தார். நாயனார் கூலிக்கு நெல் அறுத்து கிடைக்கும் கூலி செந்நெல்லாயின் இறைவனுக்குப் படைப்பார். கார் நெல்லாயின் தனக்கு உணவாக்கிக் கொள்வார். கார் நெல் கிடைக்காமல் செந்நெல் மட்டும் கிடைக்க தண்ணீர் மட்டும் குடித்து உயிர் வாழ்ந்தார். ஒரு நாள் இறைவனுக்கு அமுதூட்ட செந்நெல் அரிசியும், கீரையும், மாவடுவும் கொண்டு செல்லும் போது, பசியால் நாயனார் கால் இடறி கீழே விழ "ஐயோ இறைவனைப் பட்டினி போட்ட நான் பெரும் பாவியானேன்" என்றெண்ணி அரிவாளால் தன் கழுத்தை அறுக்க முயன்ற போது இறைவன் தம் திருக்கரங்களால் தடுத்து ஆட்கொண்டார். இவர் அரிவாட்டாய நாயனாராகப் போற்றப்பட்டார்.

13. ARIVATTAYA NAYANAR
(Thai - Thiruvathirai)

Arivatta Nayanar took his holy birth in a village kanamangalam enroute to Tiruturaippoondi from Tiruvarur. He was a dedicated devotee of Lord Siva and was offering red rice, red greens with tender raw mangoes as merirorious service. Lord Siva wanted to test his benign activities and pushed him to utter poverty. Nayanar took to agricultural labour and went for paddy harvesting. If wages were red paddy he will offer it to the Lord and if that was black he used to have that for himself. He took a vow to drink only water and to get only red paddy as wages. One day when he was on his way to feed red rice, red greens with tender raw mangeos he tumbled and fell down. He felt very sad and said, "I have become a grave sinner by starving the Almighty" and was about to serve his neck. The Lord himself prevented him with his Holy hands. He was hailed as Arivatta Nayanar.



14. ஆனாய நாயனார்
(கார்த்திகை - அஸ்தம்)

லால்குடியில் இருந்து வடமேற்கே 4 கி.மீ. தொலைவில் உள்ள திருமங்கலம் எனும் ஊரில் அவதரித்த ஆனாயர் பசுக்கள் மேய்ந்து கொண்டிருக்கும் நேரங்களில் சிவபெருமானை மனதில் நினைத்து புல்லாங்குழல் இசைப்பதை வழிபாடாகக் கொண்டு வாழ்ந்தார். ஒரு நாள் வழியில் கொன்றை மரத்தைக் கண்ட ஆனாயர் கண்களுக்கு அம்மரம் சடையில் கொன்றை மாலையணிந்த சிவபெருமானாகத் தோன்றியது. இறைவனைக் கண்ட மகிழ்ச்சியில் புல்லாங்குழல் எடுத்து நாட்கள் செல்வது கூடத் தெரியாத அளவுக்கு ஆனாயர் மெய்மறந்து வாசித்துக் கொண்டேயிருந்தார். அவரது வாசிப்பில் விலங்குகளும், பறவைகளும், நகரங்களில் வசிப்பவரும், தெய்வங்களும், தேவர்களும் மெய் மறக்க அருவிகளும், காட்டாறுகளும் ஓடாமல் நிற்க, இயற்கையே மயங்கிப் போனது. இறுதியில் சிவபெருமானும், இசையில் மகிழ்ந்து உமாதேவியோடு ரிஷப வாகனத்தில் காட்சியளித்து ஆனாய நாயனாரைத் தம்முடன் அழைத்துக் கொண்டார்.

14. AANAYA NAYANAR
(Karthigai - Astham)

Aanaya Nayanar took his holy birth in a village Thirumangalam four kilometers north west of Lalgudi in Tirchy district of Tamil Nadu. He was a sheperd by profession and while grazing cowherd he used to play flute as form of worshipping Lord Siva. One day on his way he saw a konrai tree. For him that looked like Lord Siva Himself wearing Kondrai flowers on his long lock. At the pleasure of having had the Holy Darshan of Lord, he sat underneath the tree and was playing flute continuously for days together with intense involvement. His sweet music enthralled everyone including the Nature and everyone was totally absorbed. The animals, birds, inhabitants of the town, deities and astrals forgot themselves and the falls and rivulets stopped moving. At last the Lord himself was pleased, gave him a special appearance in his Bull vaganam and took Nayanar also with him.




15. மூர்த்தி நாயனார்
(ஆடி - கார்த்திகை)

மதுரையில் அவதரித்த மூர்த்தியார் மதுரை சோமசுந்தரப் பெருமானுக்குச் சந்தனக்காப்பு அணிவிக்கும் திருதொண்டினைச் செய்து வந்தார். மதுரையை வென்ற கர்நாடக அரசன் மூர்த்தியாரின் தெய்வப் பணியைக் கேள்விப்பட்டு, சந்தனக்கட்டைகள் கிடைக்காதபடி தடை விதிக்க, மனம் வருந்திய மூர்த்தியார் தம் முழங்கைகளையே சந்தனக் கட்டையாகக் கருதி, கருங்கல்லில் தேய்த்தார். சதையும் எலும்பும் தேய்ந்து குருதி கொட்டுவதைக் கண்ட ஈசன் "இன்றோடு தீமைகள் விலகுகின்றன, இனி உன்திருப்பணி முடித்து சிவலோகம் அடைவாயாக" என்று கூறினார். பரமன் திருவுளப்படி மன்னன் இறந்துவிட அரசவை பட்டத்து யானையால் மாலை சூட்டப்பட்டு மூர்த்தியார் விபூதியையே அபிஷேகப் பொருளாகவும், சடைமுடியே கிரீடமாகவும், ருத்ராட்சமே ஆபரணமாகவும் கொண்டு ஆட்சி செய்து நாயனாராகப் போற்றப்பட்டார்.

15. MOORTHY NAYANAR
(Aadi - Karthigai)

Moorthiar was born at Madurai and performed the sacred service of "Santhana Kappu" (Applying the sacred sandal paste on the deity) to Madurai Somasundara Peruman. The Karnataka King who conquered Madurai on knowing about the sacred service of Moorthiar ordered a ban on the sandal curtailing the availability of the same. Grieved over this Moorthiar treated his elbow as sandal and macerated it and was bleeding. On seeing Esan (The Lord) voiced from the sky invisibly "The evils are removed away from today itself. Thou shall end thine holy services and reach Shivloka. attain the Sivaloka.The King was dead as per the Graceful will of Lord and the sovereign elephant garlanded Moorthiar. He ruled the country with the Holy as offering; long hair as crown and Rudraksha as jewels and was hailed as Nayanar.






16. முருக நாயனார்
(வைகாசி - மூலம்)

முருகநாயனார் அவதரித்த திருப்புகலூரிலிருக்கும் வர்த்தமானேச்சுரர் திருகோயிலில் ஆறு வேளைகளிலும் பூஜை நடக்கும். ஒவ்வொரு பூஜை காலத்திற்கும் ஒவ்வொரு வகை மாலைகளை இறைவனுக்குச் சாற்றி பூஜை செய்வார்கள். முருகனார் தினமும் பூந்தோட்டத்திலிருந்து கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னும் நான்கு வகையான பூக்களைப் பறித்து கோவிலுக்கு எடுத்துச் சென்று இண்டை மாலை, கோவை மாலை, பத்து மாலை, கொண்டை மாலை, சர மாலை, தொங்குமாலை என்னும் ஆறு வகையான மாலைகளை தாமே கட்டி ஆறு பூஜை காலத்திற்கும் ஒவ்வொரு வகையான மாலையை வர்த்தமானேச்சுரருக்கு சாத்துவித்து நெஞ்சுருவி சிவவாக்கியத்தை ஓதி மகிழ்வார். முருகனார் திருஞானசம்பந்தருக்கு நண்பராகி பெருமை பெற்றவர். இறைவனுக்குச் செய்த திருத்தொண்டாலும், திருஞானசம்பந்தரின் நட்பாலும் ஈசன் திருவருளைப் பெற்று முருகநாயனாராகப் போற்றப்பட்டார்.

16. MURUGA NAYANAR
(Vaikasi - Moolam)

Muruga Nayanar took his holy birth in Thiruppugalur where in is located the temple of Lord Varthamanechurar and six times puja a day is performed. For every puja the lord would be adorned with a garland of different type with variety of flowers. Murugan used to collect four kinds of flowers daily viz. runners, creepers, flowers of tree branches, water flowers, flowers of grasses and herbs and took them to temple. He used to weave six kinds of garlands viz. Inda Malai Kovai Malai, Paththu Malai Kondai malai, Saramalai and Thongu malai (For the tuft, neck, hip, waist belt and creeper) and used to chant Siva Vakkiya Mellifluously. Muruganar had the greatness of being a friend of Thirugnana Sambandar. He was hailed for his sincere and meritorious spiritual service to the Lord and for his friendship with Sambandar.






17. உருத்திரபசுபதி நாயனார்
(புரட்டாசி - அசுவினி)

கொல்லுமாங்குடிக்கு கிழக்கே 3 கி.மீ தொலைவில் அமைந்துள்ள திருத்தலையூரில் வாழ்ந்த பசுபதியார் எப்போதும் சிவபெருமானின் திருவடிகளைத் தியானித்து வருவதைத் திருத்தொண்டாகக் கருதினார். திருத்தலையூரில் அழகான தாமரைக்குளம் ஒன்று இருந்தது. தாமரைப்பூக்கள் நிரம்பியிருந்த அக்குளத்தில் பசுபதியார் இறங்கி கழுத்தளவு குளிர்ந்த நீரில் நின்று கொண்டு தன் இரு கைகளையும் தலை மீது குவித்துக் கொண்டு மனமுருகி சிவபிரானின் திருவடிகளை எண்ணி உருத்திர மந்திரத்தை தினமும் ஓதி வந்தார். மெய்யன்புடன் பசுபதியார் செய்து வந்த தவத்தின் பெருமையினையும் உருத்திர மந்திரத்தின் மகிமையினையும் கண்டு ஈசன் மகிழ்ந்து அவருக்கு திருவருள் புரிந்து தம்முடன் சேர்த்துக் கொண்டார். பசுபதியார் இறைவன் மீது கொண்ட பக்தியினால் குளிர்ந்த நீரில் தினமும் மணிக்கணக்காய் நின்று இருகரம் கூப்பி சிவபெருமானின் திருவடிகளை அடைந்ததால் இவர் உருத்திர பசுபதி நாயனாராக அழைக்கப்பட்டார்.

17. URUTHIRA PASUPATHI NAYANAR
(Purattasi - Aswini)

Pasupathiyar Lived at Thiruthalaiyur, which is situated 3 km east of Kollumangudi and he considered it as a sacred service to keep the Holy feet of Lord Shiva in his mind always. There was a beautiful lotus pond at Thiruthalayur. He recited the Uruthira Mantra soulfully keeping Holy Feets of Lord Shiva in his mind daily by keeping his hands folded over his head, submerging his body upto his neck in the chilled water of that pond which was full of lotuses. The Lord, on seeing his (Pasupathiyar) penance with true love and on the greatness of Uruthira Mantra, graced him with His kindness and took him. He is revered as Uruthira Pasupathi Nayanar as he attained the sacred Feet of Lord Shiva by his devotion on Lord by performing the standing at the chilled water daily for hours with folded hands with devotion to Lord.






18. திருநாளைப்போவார் நாயனார்
(புரட்டாசி - ரோகிணி)

மயிலாடுதுறைக்கு கிழக்கே 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மேலாதனூரில் அவதரித்து பறையடிக்கும் தொழில் செய்து வந்த நந்தனார் சிவபக்தியோடு திருப்புன்கூர் ஆலயத்தின் வெளியே நின்று வணங்குகையில் இறைவனைக் காண முடியாமல் நந்தி மறைக்குதே என்று வருந்த ஈசனும் நந்தியை விலகச் செய்து அருளினார். நந்தனார் சிதம்பர நடராஜரைத் தரிசிக்க தில்லைக்கு நாளை போவேன் என்று பல நாள் கூறி வந்ததால் அவரை மக்கள் "திருநாளைப் போவார்" என்றழைத்தனர். ஒரு நாள் சிதம்பரம் சென்ற நந்தனார் புலையனாகிய நான் எப்படி இந்நகருக்குள் சென்று இறைவனைத் தரிசிப்பது என்றெண்ணி, ஊர் எல்லையைச்சுற்றி சுற்றி வந்து அசதியில் தூங்க, ஈசன் கனவில் தோன்றி இப்பிறவி ஒழிய நீ தீயினில் மூழ்கி தில்லைவாழ் அந்தணர்களுடன் என்னை வந்தடைவாயாக என்று கூறினார். அவ்வாறே அந்தணர்கள் கனவிலும் கூற அதை ஏற்று தீயினுள் இறங்கி நந்தனார் மீண்டும் புண்ணிய முனிவராக எழுந்து நடராஜப் பெருமானைத் தரிசித்தார்.

18. THIRUNAALAIPPOVAR NAYANAR
(Purattasi - Rohini)

Nanthanar was born at Melathanur which is situated 3 km. east of mayiladuthurai and was professionally a hailer beating drum. He worshipped Lord Shiva with great devotion standing out side the Temple at Thiruppunkoor and grieved over his inability to see the Lord as the Nandhi was blocking the sight of Lord. The Lord graced him with that the Nandhi moved aside. Nandhanar used to say many a day that he would go tomorrow for Thillai to worship Chidambaram Natarajar and because of that the people called him "Thirunaalaippovar". One day he went to Chidambaram and came round and round the borders of Chidambaram lamenting as to how to reach the temple being "Pulaya" and became tired and slept. The Lord came in his dream and advised him to enter into sacrificial fire and get salvation of this birth, and would reach him along with the Brahmins of Thillai. The message was given to Thillai Brahmins also. Accepting that Nanthanar stepped into the fire and resurrected again as a holy saint and got darshan of Lord Nataraja.







19. திருக்குறிப்புத் தொண்ட நாயனார்
(சித்திரை - சுவாதி)

காஞ்சிபுரத்தில் அவதரித்த சலவைத் தொழிலாளியான நாயனார் சிவனடியார்களுக்கு இலவசமாகத் துணி துவைத்துக் கொடுக்கும் தொண்டினை உலகறியச் செய்ய எண்ணி சிவபெருமான் ஒரு சிவனடியார் போல வேடமிட்டு அழுக்கான ஆடையுடன் நாயனாரிடம் வர, அடியாரின் நிலையை உணர்ந்த நாயனார் ஐயா, தங்கள் ஆடைகளைத் தாருங்கள் வெளுத்துத் தருகிறேன் என்று கேட்க, அதற்கு அடியார் இந்தக் கந்தை ஆடையை மாலைக்குள் வெளுத்துத் தராவிட்டால் என் உடம்பிற்குத் தீங்கிழைத்த கொடுமைக்கு ஆளாவாய் என்று கூறி கொடுத்தார். நாயனார் துவைக்க முயலும் போது ஆரம்பித்த மழை நின்றபாடில்லை. மாலைப்பொழுதும் வந்துவிட, சிவனடியாரின் மேனிக்குத் துன்பம் இழைத்த நான் இருந்து பயன் என்ன? என்றெண்ணி துணி துவைக்கும் கல்லில் மோத இறைவன் தாங்கிப் பிடித்து அருள்பாலிக்க இவர் பிறர் குறிப்பறிந்து சேவை செய்ததால் அன்று முதல் திருக்குறிப்புத் தொண்ட நாயனாராகப் போற்றப்பட்டார்.

19. THIRUKKURIPPU THONDA NAYANAR
(Chithirai - Swathi)

The Nayanar was born at Kanchipuram and had a calling of dobi (washerman). He used to wash the clothes of Devotees of Siva free of cost and the Lord wished to show the world his service and came in the guise of a Sivanadiyar with dirty clothes to Nayanar. He felt the plight of Adiyar and asked him "Sir, hand over your clothes to me, will wash it for you". The Adiyar handed it over and said that he should return this linen cloth washed before evening. Otherwise he would be held responsible for hurting his body. When Nayanar began to wash, it started raining and there was no let up. Evening also arrived. He thought himself as "What is the utility to lead a life of mine after hurting the body of Sivanandiyar" and dashed his head against the washing stone. The Lord graced him by holding his head. He is revered as Thirukkuripputhonda Nayanar from that day as he served others taking cue from them.





20. சண்டேசுவர நாயனார்
(தை - உத்திரம்)

கும்பகோணத்தில் இருந்து திருப்பனந்தாள் செல்லும் வழியில் அமைந்துள்ள திருச்சேய்ஞலூரில் அவதரித்த விசாரசருமர் மாடு மேய்க்க ஆரம்பித்ததிலிருந்து பசுக்கள் அளவுக்கதிகமாய் பால் கொடுத்தன. முற்பிறவியின் உணர்ச்சியினால் விசாரசருமருக்கு இப்பசுக்களின் பாலினால் சிவலிங்கத்தை அபிஷேகம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட மணியாற்றங்கரையில் மண்ணால் சிவலிங்கம் செய்து பாலைக் கறந்து தினமும் அபிஷேகம் செய்து வழிபட்டார். இதைக் கண்ட பசுக்களின் உரிமையாளர்கள், விசாரசருமரைக் கண்டிக்குமாறு தந்தை எச்சதத்தரிடம் கூற, உண்மையை அறிய விசாரசருமரைப் பின் தொடர்ந்து சென்று அபிஷேகப் பால் குடத்தை எட்டி உதைக்க, உதைத்தவர் தன் தந்தை என அறிந்தும் விசாரசருமர் அவரது கால்களை வெட்டி வீழ்த்தினார். உடனே சிவபெருமான் தோன்றி உனக்கு அம்மையும் அப்பனும் நானே" என்று கூறி கொன்றை மாலையைத் தலையில் சூடி விசாரசருமருக்கு சண்டேசுரப்பதம் அருளினார்.

20. CHANDESHWARA NAYANAR
(Thai - Uthiram)

Visarasarumar was Born At Thiru Cheiznaloor, which is enroute To Thirupananthal from Kumbakonam. He grazed cattle and when he grazed the cows would give more milk. Visarasarumar had an intuition, that he should perform abhishekam to Sivalingam with the milk of those cows. He made a Sivalingam at maniatrangarai with sand and worshipped it daily by performing abhishekam with that milk. On seeing this owners of the cows complained to his father Yetchathathan to reprove Visarasarumar. He followed Visarasarumar to find out the truth and kicked the pot containing milk for Abhishekam. Visarasarumar cut his legs though he was his father. Suddenly Lord Shiva appeared and said, "I am the Father and Mother to you" (Unakku Ammaiyum Appanum Nane) and placed kondrai flower on his head and graced Visarasarumar with Chandeswara Patham (Attainment of Sacred Feet)






21. திருநாவுக்கரசு நாயனார்
(சித்திரை - சதயம்)

பண்ருட்டி அருகில் அமைந்துள்ள திருவாமூரில் அவதரித்த மருள்நீக்கியார் சமணமதத்திற்கு தொண்டாற்றி வருவதைக் கண்டு கவலையுற்ற மருள்நீக்கியாரின் சகோதரி திலகவதியார், இறைவனை வேண்ட, அவரது கனவில் சிவபெருமான் தோன்றி, “மருள்நீக்கியாருக்கு சூலை நோய் தந்து மனந்திருந்தச் செய்வேன்” என்று கூறி மறைந்தார். அவ்வாறே மருள் நீக்கியாருக்கு சூலை நோய் ஏற்பட்டு சமணத் துறவிகளால் குணமடையாமல் போக அவர் திலகவதியாரை வந்தடைந்தார். திலகவதியார் சிவத்தொண்டு புரியுமாறு கூறி திருநீற்றைக் கொடுக்க, அதைப் பூசிய மருள்நீக்கியாருக்கு சூலை நோய் மறைந்தது. மருள்நீக்கியார் “கூற்றாயினவாறு” என்னும் திருப்பதிகம் பாடினார். அப்போது, “வாய் மணக்க பதிகம் பாடியதால் இன்று முதல் உன் பெயர் நாவுக்கரசு” என்று வானில் குரல் ஒலித்தது. சமணர்கள் தூண்டுதலால் அரசன் நாவுக்கரசரை கல்லுடன் கட்டி கடலில் எறிய நாயனார் “சொற்றுணைவேதியன்” எனும் பதிகம் பாடி கரை சேர்ந்தார்.

21. THIRUNAVUKARASU NAYANAR
(Chithirai - Sadayam)

Marul Neekiar was born at Thiruvamoor, which is situated near Panruti and was serving for Jainism. On seeing this Thilakavathiar, the grieved sister of Marulneekiar, prayed Lord. The Lord Shiva appeared in her dream and told "I will turn him up right afflicting him the disease of soolai (derangement of humors)" and disappeared. Accordingly he was affected by soolai disease and could not be cured by the jain Saints. He came to Thilagavathiar. Thilagavathiar offered him the sacred Ash (Thiruneeru) and ordered him to perform Sivathondu (Service to Shiva). He applied the Thiruneeru and got cured of the soolai disease. Marulneekiar sung a Thiruppathigam (Sacred hymn) "Kootrayinavaru" - At that time a voice from the cosmic space heard as "From today onwards you are called as Navukkarasu (King of words) as you sang the illustrious hymn". On the instigation of Jains the King had thrown Navukkarasar into the sea tying him with stone and the Nayanar arrived the shore by singing the hymn "Sotrunai Vedhiyan."






22. குலச்சிறை நாயனார்
(ஆவணி - அனுக்ஷம்)

பட்டுக்கோட்டையில் இருந்து இராமேச்சுரம் செல்லும் சாலையில் அமைந்துள்ள மணமேற்குடி எனும் ஊரில் அவதரித்த குலச்சிறை நாயனார் சிவ சின்னங்களான விபூதி, உத்திராட்சம், கோவணம் ஆகியவை அணிந்து "நமச்சிவாய" என்று உச்சரித்து வருகின்ற சிவனடியார்கள் எவராக இருந்தாலும் ஊர் எல்லையிலேயே இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பதையே சிவத்தொண்டாகக் கருதினார். குலச்சிறை நாயனார் பாண்டிய மன்னனான நின்ற சீர் நெடுமாறனுக்கு முதல் அமைச்சராகவும், மன்னனின் மனைவி மங்கையர்க்கரசி அம்மையாரின் திருத்தொண்டிற்கு உதவியாளராகவும் பணியாற்றி வந்தார். நெடுமாறனின் ஆட்சிக்குப் பங்கம் விளைவிக்கும் பகைவர்களை ஒழிக்கத் திட்டங்களைத் தீட்டி தந்தார். திருஞானசம்பந்தரின் நட்பையும், பேராதரவையும் பெற்ற இவர் அறுபத்து மூவர்களுள் குலச்சிறை நாயனாராகப் போற்றப்பட்டார்.

22. KULACHIRAI NAYANAR
(Aavani - Anusham)

Kulachirai Nayanar was born at Manamerkudi which is situated on the way to Rameswaram from Pattukottai. He used to welcome the Devotees of Siva, whomsoever it may be, at the entrance of the village, with a smiling face who are chanting "Namashivaya", wearing the symbols of Siva viz. Vibhuthi, Rudraksha and Kovanam. He considers it as Sivathondu. Kulachirai Nayanar served the Pandya King Nindraseer Nedumaran as his chief minister and served as an assistant to the Queen Mangaiyarkarasi in her Thiruthondu. He sketched the plans to eradicate the enemies who cause damage to the rule of Nedumaran. He got the friendship and support of Thirugnana Sambandar and revered as Kulachirai Nayanar among sixty three Nayanars.





23. பெருமிழலைக் குறும்ப நாயனார் (ஆடி - சித்திரை)

புதுக்கோட்டையில் இருந்து மதுரை செல்லும் வழியில் அமைந்துள்ள பெருமிழலை எனும் ஊரில் அவதரித்த பெருமிழலைக் குறும்பர் உலகம் முழுவதும் பரவியிருக்கும் சிவனடியார்களைப் பற்றி தெரிந்து கொள்ள பெரிதும் ஆசைப்பட்டார். இதனடிப்படையில் திருத்தொண்டர் பதிகம் பாடிய சுந்தரமூர்த்தி நாயனாரிடம் அளவு கடந்த பக்தி கொண்டார். குறும்பர் அட்டமா சித்திகளையும் நமசிவாய என்னும் மந்திரத்தை உணவாகவும், உயிராகவும் கொண்டு இமைப்பொழுதும் துதித்தும், யோகப் பயிற்சியில் மகாப் பெரியவரானார். சுந்தரமூர்த்தி நாயனாருக்கு சிவபெருமான் திருக்கயிலாய வாழ்வளிக்கப் போகிறார் என்பதை தன் யோகச் சக்தியினால் உணர்ந்த குறும்பர், “என் கண்ணுக்கு கண்ணான குருவைப் பிரிந்து நான் எப்படி வாழ்வேன்”? என்று கூறி மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கு கரணங்களையும் ஒன்றுபடுத்தி தனது சிரசின் வழியாகத் தன் ஆன்மாவை வெளியேற்றி கபால மோட்சம் அடைந்தார். அன்று முதல் இவர் பெருமிழலைக் குறும்ப நாயனாராக அழைக்கப்பட்டார்.

23. PERUMIZHALAI KURUMBA NAYANAR (Aadi - Chithirai)

Perumizhalai Kurumba Nayanar was born at perumizhalai, which is situated on the way to Madurai from Pudukkottai and greatly wished to know about the Sivanadiyars who are spread all over the world. On account of that he developed boundless devotion towards Sundaramoorthy Nayanar who had sung "Thiruthondar Pathigam". Kurumbar acquired Attamasidhi and lived on the mantra "Nama Sivaya" as food and spirit and prayed without losing fraction of second and became a master in yoga practice. Kurumbar perceived the fact that Lord Shiva will bestow Sundaramoothy Nayanar the Bliss of Thirukailaya life by his power of yoga and asked himself as "How can I live without my Guru who is the eyes of mine". He then fused his four karanas viz will, Buddhi, Siddha and Agankara and attained "Kabala Moksha" by sending his Atma (the soul or spirit) through his head. From that day he is revered as Perumizhalai Kurumba Nayanar.






24. பேயர் என்கிற காரைக்காலம்மையார் (பங்குனி - சுவாதி)

புதுச்சேரி மாநிலம் காரைக்காலில் அவதரித்தவர். காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் – புனிதவதியார். இவருடைய கணவர் பரமதத்தனைத் தேடி வந்த நண்பர் இருமாங்கனிகளைக் கொடுக்க அதில் ஒன்றைப் புனிதவதியார் சிவனடியார்க்குக் கொடுத்து உணவளித்தார். பரமதத்தனுக்கு மீதியுள்ள ஒரு மாங்கனியைப் வைத்து உணவு பரிமாற அவர் மற்றொரு கனியையும் கேட்டார். புனிதவதியார் இறைவனை வேண்டி ஒரு மாங்கனியைப் பெற்றார். அதை உண்ட பரமதத்தன் சுவை மிகுதியால் நடந்ததைக் கேட்டு மனைவியின் தெய்வீகத் தன்மையினை உணர்ந்து வேற்றூர் சென்று மறுமணம் செய்து வாழ, அதை அறிந்து புனிதவதியார் சென்ற போது தன் புதிய மனைவியுடன் காலில் விழுந்து வணங்க, அம்மையார் உலக வாழ்வை வெறுத்து ஈசனிடம் பேய் உருவம் வேண்டி, தலையாலேயே நடந்து திருவாலங்காட்டிற்குச் செல்ல அங்கே சிவபெருமான் உமாதேவியோடு நடனம் புரியும் காட்சியளித்தார்.

24. PEYAR (ALIAS) KARAIKKAL AMMAIYAR (Panguni - Swathi)

Ammaiyar Was born at Karaikkal, Puducheri State. The original name of Karaikkal Ammaiyar was Punithavathiar. She was handed over two mango fruits by a friend of her husband Paramathathan who came to see him. Punithavathiar offered one of the mangoes to a Devotee of Siva as meal to him, She served food to Paramathathan with the other mango and he asked for one more. Punithavathiar got a mango by praying the Lord. He ate it and it tasted much better and he came to know about the miracle. He realized the holiness of his wife and left for another village and got remarried. On knowing this Punithavathiar went up to him and he along with his newly wedded wife prostrated before Punithavathiar and worshipped. Ammaiyar renounced the temporal life and prayed the Lord 'Pei Uruvam (hideous Body)' and walked with her head to Thiruvalangadu and there the Lord shiva along with Uma Devi offered the dancing darshan.






25. அப்பூதியடிகள் நாயனார் (தை - சதயம்)

கும்பகோணத்திலிருந்து திருவையாறு செல்லும் வழியில் அமைந்துள்ள திங்களூரில் அவதரித்த அப்பூதியடிகள், திருநாவுக்கரசரை நேரில் பார்க்காமலேயே அவர் மீது பக்தி கொண்டு தனது குழந்தைகளுக்கும், பசுக்களுக்கும், பொருட்களுக்கும் அவர் பெயரையே சூட்டி மகிழ்ந்தார். திங்களூர் வழியாக வந்த திருநாவுக்கரசர் அப்பூதியடிகளைப் பற்றி கேள்விப்பட்டவுடன் அவரது வீட்டிற்குச் சென்றார். வீட்டிற்கு வந்த திருநாவுக்கரசரை அப்பூதியடிகள் வரவேற்று மகிழ்ந்து நாவுக்கரசருக்கு உணவு பரிமாற எண்ணினார். அதனால் வாழை இலை பறிக்கச் சென்ற அப்பூதியடிகளின் மூத்த மகன் பாம்பு கடித்து இறந்துவிட, மகனை பாயால் மூடி வைத்து விட்டு நாவுக்கரசருக்கு உணவு பரிமாறினார். விருந்துண்ண அமர்ந்த நாவுக்கரசர் “எங்கே மூத்த மகன்” என்று கேட்க அப்பூதியடிகள் நடந்ததைக் கூற, நாவுக்கரசர் இறந்த சிறுவனைத் திருப்பதிகம்பாடி உயிர் பெறச் செய்தார். நாவுக்கரசர் விருந்துண்ணத் தடைப்பட்டு விடக்கூடாது என்றெண்ணிய அப்பூதியடிகளுக்கு ஈசன் காட்சியளித்தார்.

25. APPUDHIADIGAL NAYANAR (Thai - Sadayam)

Apputhiadigal was born at Thingaloor which is situated on the way to Thiruvaiyaru from Kumbakonam. He got devotion on Thirunavukkarasar without seeing him directly and christened his children, cows and things his name and joyed over that. Thirunavukkarasar and on knowing about Apputhiadigal went to his house. Apputhiyadigal welcomed Thirunavukkarasar happily and wanted to serve him food. The elder son of Apputhiadigal was sent to bring banana leaves and was dead due to snake bite. He rolled up his son with a mat and served food to Thirunavukkarasar. Navukkarasar, who sat for the dinner asked him, 'where is your elder son' and Apputhiadigal revealed the events, Navukkarasar resurrected the dead boy into life by singing Thirupathigam. The Lord gave Apputhiadigal the darshan, to ensure that the dinner to Navukkarasar should not be disturbed.






26. திருநீலநக்க நாயனார்
(வைகாசி - மூலம்)

சன்னாநல்லூரில் இருந்த நாகூர் செல்லும் வழியில் அமைந்துள்ள திருச்சாத்தமங்கை எனும் ஊரில் அவதரித்த திருநீலநக்கர் தன் மனைவியுடன் கோவிலுக்கு சென்று பூஜை செய்து கொண்டிருக்கும் போது சிலந்தி ஒன்று அயவந்திநாதர் மீது விழ, அதைக் கவனித்த திருநீலநக்கரின் மனைவி வாயால் ஊதி விரட்டும் போது அயவந்திநாதர் மீது உமிழ் நீர் தெறித்து விட, இதைக் கண்ட திருநீலநக்கர் உண்மை புரியாமல் மனைவியைத் திட்டி, இனி என்னோடு வாழ உனக்குத் தகுதியில்லை என்று கூறி, பிரிந்து வீட்டிற்குச் செல்ல அவரது மனைவி கோவிலிலேயே தங்கி விட்டார். இரவில் தூங்கிய திருநீலநக்கரின் கனவில் ஈசன் தோன்றி, "உமது மனைவி என் மேனியில் ஊதிய இடம் தவிர மற்ற இடமெல்லாம் சிலந்தி கொப்புளம் வந்துள்ளது பாரும்" என்று கூறி மறைய காலையில் திருநீலநக்கர் கோவில் சென்று இறைவனிடம் மனம் வருந்தி வேண்டி தன் மனைவியுடன் வீடு சென்று சிவத்தொண்டு புரிந்து திருநீலநக்க நாயனராகப் போற்றப்பட்டார்.

26. THIRUNEELANAKKA NAYANAR
(Vaikasi - Moolam)

Thiruneela Nakkar was born at Thiruchata Mangai which is situated on the way to Nagoor from Sannanallur. He was performing pooja in the Temple along with his wife and at the that time a spider fell on the Lord Ayavandhi Nathar. On Seeing this his wife drove it away by blowing her mouth and the saliva sprayed on the Lord Ayavandhi Nathar. On seeing this Thiruneela Nakkar, without knowing the fact scolded his wife and told her that she lost the right to live with him and went home. His wife stayed at the Temple itself. The Lord appeared in the dream of Thiruneela Nakkar and told as 'see there are blisters on my body except the place where your wife had blown upon' and disappeared. Thiruneela Nakkar went to the Temple in the morning and prayed the Lord for the fault and went home with his wife and involved in Sivathondu and revered as Thiruneela Nakka Nayanar.




27. நமிநந்தியடிகள் நாயனார்
(வைகாசி - பூசம்)

திருவாரூரில் இருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் வழியில் அமைந்துள்ள ஏமப்போரூரில் அவதரித்த நமிநந்தியடிகள் ஒரு சிவபக்தர். ஒரு நாள் நமிநந்தியடிகள் இரவுப்பொழுதில் அறிநெறியப்பர் ஆலயத்தில் நெய் விளக்கேற்ற விரும்பினார். அப்போது அவரிடம் நெய் இல்லாததால் பக்கத்து வீட்டில் நெய் கேட்க, அவர்கள் சமணர்கள் என்பதால் நெய்யில்லை என்று கூறி தண்ணீரை விளக்கெரிக்க வேண்டியது தானே என்று ஏளனம் செய்தனர். அப்போது "நமிநந்தியே, அருகிலுள்ள குளத்துநீரைக் கொண்டு விளக்கெரிய நான் அருள் செய்வேன்" என்று அசரீரி கேட்க, நமிநந்தியடிகள், குளத்துநீரைக் ஆலய விளக்குகளுக்கு ஊற்றி திரியிட்டு தீபமேற்ற தீபங்கள் ஒளிவிட்டு பிரகாசித்தன. இதையறிந்த சோழ மன்னன் அறிநெறியப்பர் ஆலயத்திற்குப் பூஜை பொருட்களை வழங்கி, திருவாரூர் தியாகேசப் பெருமானுக்கு திருத்தொண்டு நடைபெற நமிநந்தியடிகளையே தலைவராக நியமித்தார் அன்று முதல் நமிநந்தியடிகள் நாயனாராகப் போற்றப்பட்டார்.

27. NAMI NANDHI ADIGAL NAYANAR
(Vaikasi - Poosam)

Nami Nandhi adigal was born at Emaporur, enroute to Thiruthuraipoondi from Thiruvaroor. He is devotee of Lord Shiva. One day he wished to light ghee lamps (Nei Theepam) at Arineriappar Temple at night hours. But he had no ghee with him and asked the neighbours for ghee. They answered in the negative and teased him to light the lamps with water as they were Jains. At that time a Divine voice was heard as "Oh Nami Nandhi I will grace that the lamps were light up with the nearby pond water". Nami nandhi adigal filled the Temple lamps with the pond water and placed the threads and lit the lamps and they were lit up glowingly. On knowing this the Chola King offered pooja articles and materials to Arineriappar Temple and appointed Nami Nandhi adigal as chief priest to perform Thiruthondu to Lord Thiagesa Peruman. From that day he is revered as Nami Nandhi adigal Nayanar.






28. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் (வைகாசி - மூலம்)

சீர்காழியில் அவதரித்த திருஞானசம்பந்தர் குழந்தையாக இருக்கும் போது, தந்தை சிவபாத விருதயர் நீராட, நீரில் மூழ்கும் தந்தையைக் காணாது தோணியப்பர் கோபுரத்தைப் பார்த்து, “அம்மா அப்பா” என அழ, சிவபெருமானும், உமாதேவியும் குழந்தையைக் காக்க, உமாதேவியார் பாலைப் பொற்கிண்ணத்தில் ஊட்டினார். குழந்தையின் வாயில் பாலைக் கண்ட தந்தை பால் கொடுத்தவர் யார்? எனக் கேட்க குழந்தை தோணியப்பரை விரலால் காட்டி “தோடுடைய செவியன்” என்று திருப்பதிகம் பாடியது. திருமயிலை சிவநேசச் செட்டியார் தன் மகள் பூம்பாவையைச் சம்பந்தருக்கு மணமுடிக்க உறுதி பூண்டிருக்க, ஒரு நாள் பூம்பாவை பாம்பு கடித்து இறந்து விட, செட்டியார் திருஞானசம்பந்தரை மயிலைக்கு அழைத்து நடந்ததைக் கூற திருஞானசம்பந்தர் பூம்பாவையின் அஸ்திக் குடத்தை குளக்கரையில் வைத்து “மட்டிட்டபுன்னை” என பதிகம் பாட குடம் உடைந்து பூம்பாவை எழுந்து வந்தாள்.

28. THIRUGNANA SAMBANDA MOORTHY NAYANAR (Vaikasi - Moolam)

Thirugnana Sambandhar was born at Seerkazhi. When he was a child, his father Sivapatha Viruthaiyar was bathing in the pond leaving him on the bank and when he was dipping into the water, the child lost sight of his father and cried "Mom dad" looking at Thoniappar Temple Gopuram (Tower). Lord Shiva and Uma Devi fed the child with milk in golden cup. On seeing the milk in the mouth of the child the father asked the child 'who gave the milk' ? For that the child pointed Thoniappar by his finger and sang Thiruppathigam "Thodudaya Seviyan". Thiru Mayilai Sivanesa Chettiyar betrothed her daughter Poompavai to give in marriage with Sambandar and one day Poompavai died due to snake bite. The Chettiar called upon Thirugnanasambandar to Mayilai and apprised of the fact. Thirugnanasambandar placed the pot which contained the ashes of Poompavai on the banks of the pond and sang a Thiruppathigam 'Mattitta Punnai' and the Poompavai raised lively breaking the pot.






29. ஏயர் கோன் கலிக்காம நாயனார்
(ஆனி - ரேவதி)

திருப்புண்கூர் அருகில் அமைந்துள்ள பெருமங்கலம் எனும் ஊரில் அவதரித்த கலிக்காமர், சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானை பரவை நாச்சியாரிடம் தூது அனுப்பிய சேதி கேட்டு கோபம் கொண்டார். இருவரையும் ஒன்று சேர்க்க ஈசன் கலிக்காமருக்கு சூலை நோய் தந்து, கனவில் தோன்றி சுந்தரரால் நோய் தீரும் என்றார். இறைவனையே ஒரு பெண்ணிடம் தூது விட்டவரால் நோய் தீர வேண்டுமெனில் அது தேவையில்லை என்று மறுத்து விட, இறைவன் சுந்தரமூர்த்தியாரின் கனவில் தோன்றி கலிக்காமரின் சூலை நோயை அகற்று என்று கூற, சுந்தரர் திருப்புன்கூர் வந்தார். இதையறிந்த கலிக்காமர் இவரால் நோய் தீருவதை விட தன் உயிரை விடுவது மேல் என்றெண்ணி உடைவாளால் தன் உடம்பைக் கிழித்து உயிர்துறக்க, அங்கு வந்த சுந்தரர் நடந்ததையறிந்து அவரும் உயிர்விட வாளை எடுத்தார். அப்போது சிவனருளால் கலிக்காமர் உயிர் பெற்று சுந்தரரைத் தடுத்தார். சிவனார் மீது கொண்ட பக்தி வைராக்கியத்தால் இவர் நாயனாராகப் போற்றப்பட்டார்.

29. AYERKON KALIKAMA NAYANAR
(Aani - Revathi)

Kali Kamar was born at Perumangalam, which is situated near Thirupunkur. He was angry with Sundaramoorthy Nayanar as he had sent Lord Shiva as emissary to Paravai Nachiar. The Lord wished to unite them and afflicted Kalikamar with soolai disease and appeared in the dream and told that the disease will be cured by Sundarar. The offer was refused as Sundarar had utilized the Lord as Emissary. The Lord appeared in the dream of Sundaramoorthiar and advised to cure the soolai disease of Kalikamar. Sundarar came to Thirupunkur. On knowing that Kalikamar thought it was better to lose life than to be cured by him and killed himself by the sword. Sundarar, who arrived there, came to know the happenings and tried to kill himself with sword. At that time Kalikamar rose alive by the grace of Lord Shiva and prevented Sundarar. He (Kalikamar) is revered as Nayanar because of his staunch devotion to Lord Shiva.







30. திருமூல நாயனார்
(ஐப்பசி - அசுவினி)

திருவாவடுதுறை அருகில் அமைந்துள்ள சாத்தனூரில் அவதரித்த மூலர் பசுக்களை மேய்ச்சலுக்காக ஓட்டிச் சென்ற போது ஒரு நாள் பாம்பு கடித்து இறந்து விட பசுக்கள் வருந்தி நின்றன. திருநந்தி தேவரின் திருவருள் உபதேசம் பெற்ற நான்மறை சுந்தரர் அங்கு வந்தார். அவர் பசுக்களின் துயர் போக்க எண்ணி தன் அட்டமாசித்தியினால் தன் உடலை விட்டு நீங்கி இறந்த மூலருடைய உடலில் புகுந்து திருமூலராக உயிர்தெழுந்ததைக் கண்ட பசுக்கள் மகிழ்ந்து தன் தொழுவங்களை அடைந்தன. மூலரின் உடலில் புகுந்த நான்மறை சுந்தரர் மூலரின் மனைவியை அறியாதது போல் நின்றதால் மூலரின் மனைவி சந்தேகப்பட்டு ஊரைக்கூட்ட, அவர்கள் மூலர் ஞானநிலை அடைந்து விட்டார் என்று கூறினர். மூலரின் உடலில் உள்ள நான்மறை சுந்தரர் தனது உடலைத் தேடிச் செல்ல அது காணாது போகவே அவர் இது ஈசனின் செயல் என்றெண்ணி திருமூலரின் உடலிலே நிலை பெற்று திருவாவடுதுறையில் ஒரு பெரிய அரச மரத்தடியில் சிவயோகத்தில் அமர்ந்து வருடத்திற்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்களைப் பாடி அருளினார். இதுவே திருமந்திரம் எனப்படும்.

30. THIRUMOOLA NAYANAR
(Aippasi - Aswini)

Moolar was born at Sattanoor, which is situated near Thiruvavaduthurai and one day he was bitten by snake and died when herded the cows for grazing. The cows were standing grieved over this. Nanmarai Sundarar, who got the graceful initiation (Thiruvarul Upathesam) of Thirunandhi Devar, came there. He wished to redress the grievance of the cows and left his body by his attama Siddhi and entered into the dead body of Moolar. He got up as Thirumoolar and the cows were delighted and reached their shed. The Nanmarai Sundarar, who entered in the body of Moolar stood unknown about his (Moolar's) wife. The wife of Moolar called upon the locals on suspicion. They told her that Moolar had attained Gnana. The Nanmarai Sundarar who was in the body of Moolar went in search of his body and found that was missing. He felt that it was an act of Lord and stayed in the body of Thirumoolar and sat under a big Banyan tree in Thiruvavadu Thurai performing Sivayoga and rendered three thousand hymns one verse a year. These are Called "Thirumanthiram".





31. தண்டியடிகள் நாயனார்
(பங்குனி - சதயம்)

திருவாரூரில் அவதரித்து பார்வையற்றவராகிய தண்டியடிகள் திருவாரூர் குளத்தைத் தூர் வார, அதை சமணர்கள் தடுத்து குருடன் என்று ஏளனம் செய்ய தண்டியடிகள் நான் கண்பார்வை பெற்றால் என்ன செய்வீர்கள் என்று கேட்க அவர்கள் ஊரைவிட்டுச் செல்வோம் என்று கூற, தண்டியார் இறைவனிடம் மன்றாட, கனவில் ஈசன்தோன்றி நீ பார்வை பெற்று சமணர்கள் பார்வை இழப்பர் என்று கூற அது போல் சோழ மன்னன் கனவிலும் கூறியதோடு திருக்குளப் பணியைச் செய்வாயாக என்றும் கூறினார். மறுநாள் அரசன் முன்னிலையில் தண்டியார் நான் பார்வை பெற்று இவர்கள் ஊரை விட்டு செல்லும் வரை பார்வையிழப்பர் என்று கூறி திருமந்திரம் ஓதி மன்னன் முன்னிலையில் குளத்தில் மூழ்க, தண்டியார் பார்வை பெற்று சமணர்கள் பார்வையிழந்தனர். எனவே இவரும் நாயனாராகப் போற்றப்பட்டார்.

31. THANDIYADIGAL NAYANAR
(Panguni - Sadayam)

Thandiadigal was born at Thiruvaroor and became blind. He desilted the Tank of Thiruvaroor and the Jains prevented that and teased him as a blind. Thandiadigal asked them that what will they do if he regained sight. They replied that they will leave the city if so. Thandiyar prayed to the Lord. The Lord appeared in his dream and said" you will regain your sight and the Jains would lose it". Also the Lord appeared in the dream of Chola King and informed the same and ordered him to desilt the tank. The next day the Thandiyar told the King that he would get the eye sight and Jains would lose the eye sight until they leave the city, and dipped into the tank reciting. Thirumanthiram in presence of the king. The Thandiyar regained his eye sight and the Jains had lost it. Hence he was also revered as Nayanar.





32. மூர்க்க நாயனார்
(கார்த்திகை - மூலம்)

திருவேற்காடு எனும் ஊரில் அவதரித்த மூர்க்கர் சிவனடியார்களுக்கு உணவு படைத்து அவர் முன்னே சிவனடியார்களை உண்ணச் செய்து அதன் பின் தான் உண்ணுவதை விரதமாகப் போற்றி வந்தார். அடியார்களுக்குத் தொடர்ந்து இப்பணியினைச் செய்து வந்ததினால் எல்லாப் பொருட்களும் தீர்ந்து விட, பொருள் ஈட்ட மனமில்லாமல் மூர்க்கர் சூதாட்டத்தினால் பணம் பெறலாம் என்றெண்ணி கும்பகோணம் சென்று, பல இடங்களில் சூதாடும் போது முதல் ஆட்டத்தில் தோல்வி பெற்று பின்வரும் எல்லா ஆட்டத்திலும் தானே வெற்றி பெறுவார். இதை மறுத்துப் பேசுபவர்களைத் தன் உடைவாளால் குத்துவார். சூதாடி கிடைக்கும் பணத்தை தன் கையால் தொடாது சமைப்பவர்களால் எடுத்து சிவனடியார்க்கு உணவு அளித்து கடைப் பந்தியில் தான் உட்கார்ந்து சாப்பிடுவார். இதை தன் வாழ்நாள் முழுவதும் செய்து மூர்க்க நாயனாராகப் போற்றப்பட்டார்.

32. MOORKKA NAYANAR
(Karthigai - Moolam)

Moorkkar was born at Thiruverkadu and he used to feed the Devotees of Siva before he had and then alone he would take food. He followed it as a Viratham (Fast). He continued this service and thereby lost all his things and was not interested to earn. Moorkar decided to get money through gambling. He went to Kumbakonam and played gambling at several places. In the first spell he would lose always and at following spells he would win all the plays. He would attack with his sword those persons who refused to accept that fact. He will not touch the money with his hands which was earned out of gambling and the cook would take it and serve the Devotees of Siva with food. He would take food at last sitting of meal. He followed it throughout his life and revered as Moorkka Nayanar.






33. சோமாசிமாற நாயனார்
(வைகாசி - ஆயில்யம்)

அம்பலம் மாகாளம் எனும் ஊரில் அவதரித்த சோமாசிமாறர் சிவபெருமானைப் போற்றும் சிவயாகத்தினை விதிமுறைப்படி உலகம் இன்புறும்படி செய்யும் பேறு பெற்றவர். சிவபெருமானுடைய திருவடிகளை வணங்குவதையே பேரின்பமாகக் கருதுபவர். தம்மிடம் வரும் அடியார்களது குலம், நலம், பண்பு, விசாரியாது அவரே நம்மை ஆட்கொள்ள உரியவர் என்று கருதுபவர். திருவைந்தெழுத்தினை ஓதுவதை நித்தியக் கடனாகக் கருதுபவர். சோமாசிமாறர் சுந்தரமூர்த்தி நாயனாரிடம் பக்தி கொண்டு அவரைக் காண திருவாரூர் சென்று சுந்தரரோடு நட்புக் கொண்டு அவரது திருவடிகளைப் பற்றுக் கோடாகக் கொண்டார். ஐம்புலப் பற்றுக்களையும் விடுத்து ஆறுவகைக் குற்றங்களையும் போக்கி சைவ நெறியில் சேர்ந்து, இதுவே உய்யும் வழி என்று துணிந்து சுந்தரர் திருவடிகளைப் போற்றி வந்தார். அதனால் சிறப்பு வாய்ந்த சிவலோகத்தினை அடைந்து முக்தி பெற்று சோமாசிமாறர் நாயனராகப் போற்றப்பட்டார்.

33. SOMASIMARA NAYANAR
(Vaikasi - Ayilyam)

Somasimara Nayanar was born at Ambalam Makalam. He had the pleasure of performing the Siva Yagam which is full of praise of Lord Shiva for the happiness of the people and gained his popularity. He considered it an eternal bliss to ever worship the Holy Feet of Lord Shiva. He never enquired about the Kulam, Nalam and Panbu (Caste, creed and lineage) of the Adiyars who turned upto him and considered them as his renunciators. He considered it as an eternal duty to recite the Thiru Aintheluththu (The Holy Five letters) daily. Somasimarar had a devotion to Sundaramoorthy Nayanar, went to Thiruvaroor to acquaint himself with him and held his feet firmly as a source for Salvation. He abandoned the attachments of Five senses and eradicated six kind of crimes and followed the Saiva tenets and felt that was the way to Bliss and paid tributes to the Holy feet of Sundarar intensively. This led him to Mukthi and reaching Heavenly Shivalokam and was revered as Somasimara Nayanar.






34. சாக்கிய நாயனார்
(மார்கழி - பூராடம்)

காஞ்சிபுரம் அருகில் அமைந்துள்ள திருச்சங்க மங்கை எனும் ஊரில் அவதரித்த சாக்கியர் மெய்ப்பொருளை ஆராய்ந்து முக்தி பெற பௌத்த நூல்களைக் கற்றார். எந்த சமயமும் முடிவும் உண்மைப் பொருளைக் காட்டாது சிவநன்னெறியே உண்மைப் பொருளைக் காட்டும். ஒருவன் எக்கோலத்திலும் எந்நிலையிலும் ஈசன் திருவடிகளை மறவாதிருத்தலே உறுதிப் பொருள் என்பதை உணர்ந்து சிவபெருமானை வணங்கத் தொடங்கினார். ஒரு நாள் புதிய இடத்தில் சிவலிங்கத்தைக் கண்டதும் அர்ச்சனை செய்ய விரும்பினார். அங்கே பூக்கள் இல்லாததால் கீழே கிடந்த கற்களால் அர்ச்சனை செய்தார். சிவலிங்கத்தின் மீது கற்களால் அர்ச்சனை செய்த பின்னரே உண்ணுவதைப் பழக்கமாக வைத்திருக்க ஒரு நாள் மறந்து போய் சாப்பிட நினைக்க, உடனே கவலையுடன் ஒரு பெரிய கல்லெடுத்து பெருமான் மீது எறிந்து துதிக்க, ஈசன் அன்பை ஏற்று காட்சி தந்தருள இவரும் நாயனாராகப் போற்றப்பட்டார்.

34. SAKKIA NAYANAR
(Margazhi - Pooradam)

Sakkiar was born at Thiruchanga Mangai, which is situated near Kanchipuram. He studied Buddhist literature in search of sound doctrine to attain mukhti (Bliss). He realized that no religion or postulation can show the sound doctrine except the Saiva tenets and realized that not forgetting the holy Feet of Lord always alone is the only permanent and started worshipping Lord siva. When he saw a Lingam at a new place he wanted to perform Archana. He performed Archana with the pebbles scattered there, as there were no flowers. He used to take food only after performing Archana with pebbles on the Shivalingam. One day he was ready to take food forgetting to perform Archana. Suddenly with sorrow, he took a big stone and pelted at the Lord and prayed. The Lord offered him darshan accepting his love and he was also revered as Nayanar.



35. சிறப்புலி நாயனார்
(கார்த்திகை - பூராடம்)

மயிலாடுதுறையிலிருந்து திருக்கடவூர் செல்லும் வழியில் அமைந்துள்ள திருஆக்கூரில் அவதரித்த சிறப்புலி நாயனார் நீலகண்டப் பெருமானுக்குத் திருத்தொண்டு புரிந்து வந்தார். சிவனடியார்கள் தம்மை வந்தடைந்த போது அவர்கள் திருவடிகளில் விழுந்து வணங்கி நல்ல உணவு அடியார்களுக்குக் கொடுப்பார். அவர்கள் விரும்புவன யாவற்றையும் மேகம் போல வரையாது வழங்கிப் புகழ்பெற்றவர். சிறப்புலியார் சிவபெருமான் திருவடிகளிடம் அன்பு கொண்டு திருவைந்தெழுத்தினை நாள்தோறும் ஓதி நித்தியாக்கினியாகிய முக்தியினை வளர்த்து வந்தார். இவர் நல்ல சிவ வேள்விகளையெல்லாம் சிவபெருமானைக் குறித்தே செய்தார். சிவனடியார்களுக்கு இல்லை என்று எண்ணாமல் கொடுத்து வந்தார். இவ்வாறு பல புண்ணிய காரியங்களைச் செய்து புகழும் சிறப்பும் பெற்ற தன்மையினால் சிறப்புலி நாயனாராகப் போற்றப்பட்டு சிவபெருமான் திருவடி நிழலிலே நிலை பெற்றிருந்தார்.

35. SIRAPPULI NAYANAR
(Karthigai - Pooradam)

Sirappuli Nayanar was born at Thiru Aakur, enroute to Thirukadavur from Mayiladuthurai. He served Thiruthondu to Neelakanda Peruman. When the Devotees of Siva sought after him he offered them good food after worshipping them by prostrating at their holy feet. He offered Devotees of Siva all the things they sought without any expectation as rainy cloud would and became a celebrated one. He loved the Holy Feet of Lord Shiva and recited the Aintheluthu (Holy Five Letters) daily and kept raising the Mukhti, the Nithiyakini. He always performed Holy Shiva Velvi (Holy Fire) for Lord Shiva. He offered to Devotees of Siva without refusal whatever they wanted. As he had done several acts of merit like this he attained fame and recognition, he was revered as Sirappuli Nayanar and attained permanent seat under the Holy Feet of Lord Shiva.



36. சிறுத்தொண்ட நாயனார்
(சித்திரை - பரணி)

திருப்புகலூரிலிருந்து தென்கிழக்கே 3 கி.மீ. தொலைவிலுள்ள திருச்செங்காட்டங்குடியில் அவதரித்த பரஞ்சோதியாரின் சிவபக்தியை உலகுக்குணர்த்த ஈசன், பைரவர் வேடமிட்டு பரஞ்சோதியாரின் வீட்டிற்குச் செல்ல, பரஞ்சோதியார் பைரவரை விருந்துண்ண அழைக்க, பைரவரோ "எனக்கு ஐந்து வயது பாலகனின் கறி வேண்டும். பாலகனைப் பெற்றோரே அறுத்து சமைக்க வேண்டும், உம்மால் முடியுமானால் தயார் செய்து விட்டு அழையும்" என்று கூற உடனே பரஞ்சோதியாரும் அவர் மனைவியும் மகிழ்ச்சியோடு தன் மகன் சீராளனை அறுத்து கறி சமைத்து பைரவரை அழைக்க விருந்துண்ண உட்கார்ந்த பைரவர் தனியாகச் சாப்பிடமாட்டேன். உன் மகனையாவது அழைத்து வா என்றார். செய்வதறியாது சோதியாரும், மனைவியும் பாவனைக்காக தெருவில் சென்று சீராளனை அழைக்க அவனும் ஓடி வந்தான். மூவரும் உள்ளே வர பைரவரும் கறியும் மறைந்து ஈசனும், தேவியும், முருகனும் காட்சியளிக்க இவர் சிறுத்தொண்ட நாயனராகப் போற்றப்பட்டார்.

36. SIRUTHTHONDA NAYANAR
(Chithirai - Barani)

Paranjothiar was born at Thiruchenkattankudi which is 5 km South-East of Thriuppugalur. The Lord wanted to show the world his devotion to him and came to the house of Paranjothiar in the guise of Bairavar. Paranjothiar invited Bairavar for Dinner. Bairavar said "I want the flesh of a Five year old boy. It must be cooked by the parents of the boy themselves. If you can, then call up me after preparation". Immediately with happiness they cut their son Siralan and cooked and invited Bairavar. Bairavar said that he would not take alone and atleast their son should join him. The couple pretended to call him in the street and were surprised to see their son coming fast to them. When the three entered the flesh disappeared and Bairavar but Lord Siva with Devi and Muruga gave them a celestial appearance and blessed. His meritorious service earned him the Title of "Siruththonda Nayanar".




37. கழறிற்றறிவார் நாயனார்
(சேரமான் பெருமாள் நாயனார்) (ஆடி - சுவாதி)

கேரள மாநிலம் கொடுங்கலூரில் அவதரித்த பெருமாள் கோதையார் அரச மரபில் வந்தாலும், அதில் நாட்டமில்லாது சிவனடியார்களைப் போற்றி உபசரித்து வந்தார். இவ்வேளையில் கொடுங்கலூர் அரசன் செங்கோற் பொறையன் ஆட்சி துறந்து தவம் புரிய காட்டிற்குச் செல்ல, அமைச்சர்களும் அறிஞர்களும் கோதையாரிடம் வந்து அரசை ஏற்று நடத்துமாறு கூறினர். ஆனால் கோதையாரோ அரசப் பதவியில் ஆசையற்றவராய் இருக்க இந்நிலையில் இறைவா இது என்ன சோதனை என்று அவ்வூர் திருவருசைநாதரிடம் முறையிட்டார். ஈசன் அருளால் ஆட்சி புரியும் ஆற்றலும் எவரும் கூறப்போவதை முன்பே அறியும் ஆற்றலும் வந்தது. இதனால் கழறிற்றறிவார் என பெயரும் பெற்றார். ஒரு நாள் கழறிற்றறிவார் நகர்வலம் வர எதிரே வந்த சலவைத் தொழிலாளியின் உடலில் உவர்மண் காய்ந்து திருநீற்றைப் போல் காட்சியளிக்க அரசர் யானையில் இருந்து இறங்கி வணங்கினார். இவர் கழறிற்றறிவார் நாயனாராகப் போற்றப்பட்டார்.

37. KALARITRARIVAR NAYANAR
(Cheraman Perumal Nayanar) (Aadi - Swathi)

Peruman Kodhayar was born at Kodungalur, State of Kerala and was a descendant of Rulers. He did not evince interest in administration but worshipped Devotees of Siva and took care of them. Under these circumstances the King of Kodungalur Sengor Porayan left the Kingdom for penance to the forest. The Ministers and the advisors approached Kodhayar to accept the crown. But Kodhayar was not interested in the crown. He appealed to the Lord of that village Thiruvarusai Nathar as to what a test that was. He got the power to rule by the grace of Lord and also the power to know the things in advance which was to be referred by anybody. Because of that he came to be known as Kalaritrarivar. One day he was on the city patrol and met a dobi, whose body was full of dried brackish soil which resembled the Thiruneeru and the King stepped down from the elephant and saluted. He was revered as Kalaritrarivar Nayanar.




38. கணநாத நாயனார்
(பங்குனி - திருவாதிரை)

சீர்காழியில் அவதரித்த கணநாதர் சீர்காழி தோணியப்பருக்கு நாள்தோறும் திருப்பணிகளைச் செய்து வந்தார். தன்னை நாடிவரும் அடியார்க்கு உழவாரப்பணி பயிலச் செய்வார், நந்தவனப் பணி செய்வோர், மலர் பறிப்போர், மாலை தொடுப்போர், திருமஞ்சன நீரினைக் கொண்டு வருவோர், இரவும் பகலும் திருவலகும், திருமெழுகும் இடுவோர், திருவிளக்கேற்றுவோர், திருமுறைகளை எழுதுவோர், வாசிப்போர் என்று பலத் திருப்பணிகளைச் செய்வோரைத் திருத்தொண்டராக்கி அவர்களுக்கு எந்தக் குறைபாடு ஏற்படாமல் பாதுகாப்பு தருவார். தோணியப்பரின் இறையருள் பெற மக்களை ஊக்குவிக்கும் பணியிலும் ஈடுபட்டு வந்தார். இல்லறத்தில் மனைவியோடு இருந்து கொண்டே திருத்தொண்டு புரிந்து வந்தார். இதன் பயனாகத் திருக்கயிலையை அடைந்து பெருஞ்சிவகணங்களுக்கு நாதராகி கணநாத நாயனார் எனப் போற்றப்பட்டார்.

38. GANANATHA NAYANAR
(Panguni - Thiruvathirai)

Gananathar was born at Sirkazhi. He was performing Thiruppani to Sirkazhi Thoniappar daily. He trained people approached him in the maintenance work of the Temple. He made the persons performing several holy services like serving in the Temple garden, collecting flowers, weaving flowers, fetching the water for Holy Bath, performing Thirualagu (Brooming) and Thirumelugu (Besmearing the floor with cow-dung) day and night, lighting the Thiruvilakku, chanting the Thirumurai and writing and made them Thiruthondars taking care of them with all comforts. He was also engaged in encouraging people in attaining the Grace of Thoniappar. He performed the Thiruthondu even as he was in the Illaram (marital life) with wife. As a result of this he reached Kailash and became the chief of the attendant deities and revered as Gananatha Nayanar.





39. கூற்றுவ நாயனார்
(ஆடி - திருவாதிரை)

திருத்துறைப்பூண்டி அருகில் அமைந்துள்ள திருக்களந்தையில் பிறந்த கூற்றுவர், குறுநில மன்னர் நிலைக்கேற்ப தோள் வலிமை படைத்து பகைவருக்குக் கூற்றுவராய்த் திகழ்ந்தாலும் தன் தலைக்குச் சூட்டும் திருமுடி இல்லாதவராய் இருந்தார். இக்குறையைப் போக்க கூற்றுவர் தில்லை அந்தணர்களிடம் சென்று நவரத்தினங்கள் பதித்த அரசமுடி ஒன்று சூட்டிவிட வேண்டினார். அதற்கு அவர்கள் சோழர் குல முதல்வருக்கே அன்றி பிறர்க்குச் சூட்ட மாட்டோம் என்று மறுத்து சேர நாட்டிற்குச் சென்று விட்டனர். இதனால் மனம் சோர்ந்து கூற்றுவர், சிதம்பரத்தில் ஈசனின் திருவடிகளை வணங்கி “தேவரீருடைய திருவடியையே மணிமுடியாக அடையும் போது அடியேன் ஏன் அரசு முடிபெற வேண்டும்” என்று கூறி உறக்கம் கொள்ள சிவபெருமான் கனவில் தோன்றி தமது திருவடிகளையே முடியாகச் சூட்டியருளினார். அத்திருவடிகளையே மணிமுடியாகத் தாங்கி, நல்லாட்சி புரிந்தார்.

39. KOOTRUVA NAYANAR
(Aadi - Thiruvathirai)

Kootruvar was born at Thirukkalanthai near Thiruthuraipoondi. He was a petty king and though had the stature of being a devil to the enemies he had no crown to decorate his head. He went to Thillai Anthanar to clear up his problem and requested them to adorn him a crown studded with Navaratinas. They refused and said that they would adorn the crown only to the chief - tains of Chola Kingdom. Kootruvar was frustrated and worshipped the Lord at Chidambaram and said "when I have decorated my head with the Holy feet of Lord as Crown why should I long for a temporal crown." And slept. The Lord appeared in his dream and adorned him with his Holy Feet and graced him. He wore those Holy Feet as crown and ruled benevolently.





40. பொய்யடிமையில்லாத புலவர்கள்
(பங்குனி - கடைசி நாள்)

பொய்யடிமை இல்லாத புலவர்கள் என்போர் நீலகண்டப் பெருமானின் திருமலரடிக்கே ஆளானவர்கள். அதுவே மெய்யுணர்வின் பயன் என்று துணிந்து விளக்கியவர்கள். இவர்கள் செய்யுட்களில் திகழும் சொற்களைப் பற்றி தெளிவும், செம்மை தரும் பயனுடைய நூல்கள் பலவற்றைப் பயின்ற ஆய்வுணர்வும் உடையவர்கள். அவைகளால் பெறும் மெய்யுணர்ச்சியின் பயன் சிவபெருமானின் மலரடிகளை வணங்குதே என்ற கருத்தின் வழிநின்று தொண்டாற்றியவர்கள். சிவபெருமானின் செயலையன்றி வேறெதையும் வாய் திறந்து பாடாத நெறியில் நின்று தொண்டு செய்த மெய்யடிமையுடையவர்கள். கபிலர், பரணர், நக்கீரர் முதலிய பெரும் புலவர்களே பொய்யடிமையில்லாத புலவர்கள். கலைகள் யாவும் ஓதியுணர்ந்த அவர்கள் கவிகள் பாடுவதில் வல்லவர்கள் தில்லை நடராஜப் பெருமானின் திருவடிகளை வணங்கும் பண்புடையவர்கள்.

40. POIYADIMAYILLATHA PULAVARGAL
(Panguni - Last day)

These Poiyadimayillatha pulavargal (Poets of non pretending submission) are Devotees of Holy Lotus Feet of Lord Shri Neelakantan. They propagated this devotion as the true Sound Doctrine. They are blessed with the clarity of expression in their verses and have the yearning of quest in whatever books of righteousness they have come across. They served with the concept of Sound Doctrine as to worship the Holy Lotus Feet of Lord Siva. They are true Devotees of Siva, who have not sung anything other than the glory of Lord Siva. Kapilar, Paranar and Nakkirar like poets only are poiyadimayillatha pulavargal. They have learnt all the arts and are expert composers of verses and are worshippers of the Holy Lotus Feet of Lord Thillai Natarajar.





41. புகழ்ச்சோழ நாயனார்
(ஆடி - கார்த்திகை)

திருச்சிராப்பள்ளி, உறையூரில் அவதரித்து அவ்வூரை ஆட்சி புரிந்த புகழ்ச்சோழனார் தன் ஆட்சிக்குட்பட்ட எல்லா சிவாலயங்களிலும் தினம் பூசைகளும் திருவிழாக்களும் நடக்குமாறு செய்து வந்தார். இத்தகைய சிறப்பு பொருந்திய புகழ்ச்சோழனுக்கு ஒரு அரசன் கப்பம் கட்ட மறுக்க, அவனைப் போரில் வெல்ல அரசன் படைவீரர்களை அனுப்பப் போர் வீரர்கள் எதிரிகளை வென்று கொன்று குவித்தனர். வெட்டி வீழ்த்தப்பட்ட தலைகளைப் புகழ்ச்சோழன் முன் போட, அக்குவியலில் ஒருதலை மட்டும் குடுமியுடன் இருக்க, அதைக் கண்ட மன்னன் சிவனடியார்க்குத் தீங்கிழைத்த நான் உயிரோடு இருக்கக்கூடாது என்றெண்ணி, அடியாரின் தலையைத் தங்கத் தட்டில் வைத்து அதைத் தலையில் தாங்கி, நெருப்பில் இறங்கி உயிர் துறந்தார். ஈசன் அருளைப் பெற்று புகழ்ச்சோழ நாயனாராகப் போற்றப்பட்டார்.

41. PUGALCHOLA NAYANAR
(Aadi - Karthigai)

He was born at Uraiyoor, Thiruchirapalli and ruled that land. Pugalcholanar ensured that the Festivals and Poojas were performed daily at all the Shivalayas under his kingdom. A king denied him the Kappam (Tax) and he sent the troops to conquer that King and the soldiers won and piled up persons killed. The troops laid the heads which were slained before Pugalchola. Among them a head was with Kudimi (hair bunch). On seeing this the King told himself that he should not live any more as he caused cruelty to Devotee of Siva. He placed the head in a golden plate and carried that in his head and stepped into the fire and died. He was revered as Pugalchola Nayanar as he got the grace of Lord Shiva.






42. நரசிங்க முனையரைய நாயனார்
(புரட்டாசி - சதயம்)

பண்ருட்டியில் இருந்து உளுந்தூர்பேட்டை செல்லும் வழியில் அமைந்துள்ள திருநாவலூரில் அவதரித்த மன்னர் நரசிங்கமுனையரையர் திருவாதிரை நட்சத்திரந்தோறும் சிவபெருமானுக்கு விசேட பூசைச் செய்து, அந்நாளில் தம்மை தேடி வரும் திருநீறணிந்த தொண்டர்கள் ஒவ்வொருவருக்கும் நூறு பொற்காசுகள் கொடுத்தும், உணவு கொடுத்தும் வழிபடுவார். இவ்வாறு வழிபட ஒருநாள் காமநோயின் அறிகுறிகள் தெரியும் மேனியுள்ள ஒருவர் திருநீற்றினை அணிந்து வர பக்கத்தில் இருந்தவர்கள் திட்டி ஒதுங்க, இதைக் கண்ட முனையரையர் அவரிடம் சென்று வணங்கி உபசரித்தார். நரசிங்கமுனையரையர் நல்லொழுக்கம் இல்லாதவர்களாயினும் திருநீற்றினை அணிந்த அடியார்களை உலகத்தார் இகழ்ந்து அதனால் கொடிய நரகத்தில் விழாது உய்ய வேண்டும் என்றெண்ணி அவருக்கு இருநூறு பொற்காசுகள் கொடுத்து வழியனுப்பினார். இவர் நரசிங்க முனையரைய நாயனாராகப் போற்றப்பட்டார்.

42. NARASINGA MUNAIYARAYA NAYANAR
(Purattasi - Sadayam)

The King Narasinga Munaiyarayar was born at Thirunavalur enroute to Ulundurpet from Panrutti. He used to perform special pooja to Lord Shiva during Thiruvathirai Natchatiram and he worshipped Devotees with holy ash in their forehead and offered hundred gold coins and food. One day a person with the symptoms of venereal disease in the body came with thiruneeru on his forehead. The nearby ones abused and avoided him. On seeing this Munaiyarayar, worshipped and treated him hospitably. Narasinga Munaiyarayar thought that though they are with bad habits, such of them with Holy Ash on their forehead shall not be disregarded and are not pushed into the dreaded hell. He gave him Two hundred gold coins and send him off. He is revered as Narasinga Munaiyaraya Nayanar.





43. அதிபத்த நாயனார்
(ஆவணி - ஆயில்யம்)

நாகப்பட்டினத்தில் உள்ள நம்பியான்குப்பத்தில் அவதரித்த அதிபத்தர் மீன்பிடித் தொழில் செய்த போதிலும் சிவத்தொண்டராக வாழ்ந்து வந்தார். அதிபத்தர் தினமும் மீன்பிடிக்கும் போது வலையில் அகப்படும் மீன்களில் முதல் மீனை சிவபெருமானுக்கு என்று கடலில் வீசி விடுவார். அதிபத்தருடைய சிவபக்தியை உலகுக்குணர்த்த எண்ணிய ஈசன் பல நாட்கள் தொடர்ந்து ஒரு நாளைக்கே ஒரு மீன் மட்டுமே கிடைக்கச் செய்தார். அதிபத்தரும் வழக்கப்படி ஒரு மீனையும் சிவபெருமானுக்கென்று விட்டுக் கொண்டே வந்தார். அதனால் வறுமையில் வாடினார். ஒரு நாள் வலையில் நவரத்தினங்களால் ஆன பொன்மீன் கிடைக்க, அதையும் இறைவனுக்கு சொந்தமானது என்று கடலில் வீசிவிட்டார். விலையுயர்ந்த பொன்மீன் கிடைத்த போதிலும் சிவபக்தியினால் தியாகம் செய்த அதிபத்தருக்கு சிவபெருமான் காட்சியளித்து அருளினார். இவரும் அதிபத்த நாயனாராகப் போற்றப்பட்டார்.

43. ATHIPATHA NAYANAR
(Aavani - Aayilyam)

Athipathar was born at Nambiyan Kuppam in Nagappattinam. Though he was a fisherman he was a devotee of Lord Shiva. Athipathar used to leave the first fish in the net into the sea for Lord Shiva daily. The Lord wanted to show the world his devotion and made him to catch only one fish a day for many days continuously. Athipathar left that only one fish also, into the sea for the Lord as usual. He reeled under poverty because of that. One day a gold fish with navarathinas (with gems) was caught in the net. He left that also into the sea as it belonged to the Lord. Though priceless out of devotion he sacrificed that to Lord Shiva. Lord Shiva gave him darshan and he was revered as Athipatha Nayanar.



44. கலிக்கம்ப நாயனார்
(தை - ரேவதி)

விருத்தாசலத்திலிருந்து ஜெயங்கொண்டான் செல்லும் வழியில் அமைந்துள்ள பென்னாகடம் எனும் ஊரில் அவதரித்த கலிக்கம்பர் நாள்தோறும் சிவனடியார்களுக்கு அன்னம், கறி வகைகள், நெய், தயிர், பால் ஆகியவற்றைக் கொடுத்து திருப்பாத பூஜை செய்வதை வழக்கமாகக் கொண்டார். ஒரு நாள் கலிக்கம்பர் சிவனடியார்க்குப் பாதபூஜை செய்து கொண்டிருக்கும் போது, அவரின் மனைவி உணவுகளை எடுத்துக்கொண்டு பரிமாறுவதற்காக வந்தார். அப்போது தன்னுடைய கணவர் பாதபூசை செய்யும் சிவனடியாரைக் கண்டதும் வெறுப்பு தோன்றியது. ஏனெனில் அச்சிவனடியார் கலிக்கம்பரின் வேலையாளாக இருந்தவர். அதனால் பாத பூசைக்கு நீர் ஊற்றாமல் கலிக்கம்பரின் மனைவி நின்றார். சிவனடியார்க்கு பாதபூசை செய்து வழிபட மறுக்கும் தன் மனைவியாரின் மீது கோபம் கொண்டு அரிவாளால் மனைவியின் கைகளை வெட்டி எறிந்து பின்னர் எல்லா வழிபாட்டு முறைகளையும் தானே செய்தார். இவ்வாறு திருத்தொண்டின் வழியில் வழுவாது நின்ற கலிக்கம்ப நாயனாராகப் போற்றப்பட்டார்.

44. KALI KAMBA NAYANAR
(Thai - Revathy)

Kalikambar was born at Pennagad enroute to Jeyamkondan from Virudachalam. He used to offer the Devotees of Siva the food, curry varieties, Ghee curd and milk daily and performed the Thirupatha Pooja (Cleaning holy feet and worshipping) to them. One day while Kalikambar was performing the Patha pooja his wife came with food to serve. She showed aversion towards the Devotee of Siva to whom her husband was performing Patha pooja as that Devotee of Siva was a servant to Kalikambar once upon a time. Because of that his wife stood there without pouring water to Patha Pooja. He got angry with his wife who refused to perform Patha Pooja to the Devotee of Siva and worship, severed her hands with a aruval (sickle) and performed all the rituals by himself. Thus he was revered as Kalikamba Nayanar who never failed from Thiruthondu.




45. கலிய நாயனார்
(ஆடி - கேட்டை)

சென்னையில் உள்ள திருவொற்றியூரில் அவதரித்த கலியநாயனார் தன் அளவற்ற செல்வத்தைக் கொண்டு, திருவொற்றியூர் கோயிலின் உள்ளும் புறமும் திருவிளக்கிடும் திருப்பணியினைச் செய்து வந்தார். இவரது தொண்டை உலகுக்குக் காட்ட எண்ணிய ஈசன் திருவருளால் வறுமையடையச் செய்தார். கலியனார் செல்வர்களிடத்து எண்ணெய் வாங்கி விற்றும், பின் செக்கிற்குச் சென்று பணி செய்து பெறும் கூலியைக் கொண்டும் விளக்கேற்றினார். அதுவும் தீர்ந்து விட தன் மனைவியாரை விற்று, பொருள் தேடத் துணிந்தார். அதுவும் பயனில்லாமல் போக கலியனார். திருவொற்றியூர் கோயில் சென்று இறைவா உனக்கு திருவிளக்கேற்ற முடியாத நான் இருந்து பயனில்லை என்று கூறி, தன் கழுத்தை அறுத்து இரத்தத்தை ஊற்றி விளக்கேற்ற முனைந்தார். அப்போது சிவபெருமான் தோன்றி காட்சி தந்தருள கலியநாயனாராகப் போற்றப்பட்டார்.

45. KALIA NAYANAR
(Aadi - Kaettai)

Kalia Nayanar was born at Thiruvotriyoor in chennai. He was performing the Thiruppani of lighting the Holy Lamps (Thiruvilakku) in and out of the Temple of Thiruvotriyoor by his boundless wealth. The Lord wished to show the world his service and made him poverty stricken by his grace. Kalianar had lit lamps by selling oil and with the salary for work in the oil mill. That also had run out and he dared to sell his wife, which did not turn to be fruitful. Then kalianar went to the Temple of Thiruvotriyur and cried as his life was meaningless without lighting lamps and attempted to light the lamp, with the blood severing his neck. At that time Lord Shiva appeared and gave him darshan and he is revered as kalia Nayanar.







46. சத்தி நாயனார்
(ஐப்பசி - பூசம்)

வேலூரிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் வழியில் அமைந்துள்ள வரிஞ்சையூரில் அவதரித்த சக்தி நாயனார் தன்னைத் தேடி வரும் சிவனடியார்களை வரவேற்று விருந்துண்ணச் செய்து பொன்னும் பொருளும் கொடுப்பார். நெற்றியில் எப்போதும் திருநீற்றின் மகிமை மணந்து கொண்டேயிருக்கும் சத்தி நாயனாருக்கு இன்னொரு பண்பும் இருந்தது. அது மூர்க்கத்தனமாக இருந்தாலும் அதுவும் சிவனடியாரிடத்து கொண்ட அன்பேயாகும். சிவபெருமானைப் பற்றியோ, அவரது அடியார்களைப் பற்றியோ எவராவது இகழ்ந்து பேசினால் உடனே இகழ்ந்து பேசிய மனிதரை அவர் எட்டிப் பிடித்து இழுத்து அவரது நாக்கினை அறுத்து எறிந்து விடுவார். நாக்கை அறுப்பதற்கென்றே ஒரு கத்தியும், தண்டாயம் என்ற இடுக்கியும் எப்போது தன்னிடத்தே வைத்திருந்தார். சிவபெருமானது அடியார்க்கு நலம் கூறாதோரின் நாக்கை அறுத்து திருத்தொண்டு செய்து வந்த சத்தியனார் அம்பலவாணரின் திருவடியை அடைந்து சத்தி நாயனாராகப் போற்றப்பட்டார்.

46. SATHTHI NAYANAR
(Aiyppasi - Poosam)

Saththi Nayanar was born at Variznayoor enroute to Thiruthuraipoondi from Velur. He used to feed Siva Devotees of Shiva and offered gold and valuables to them. Though holiness of Thiruneeru was always evident from the forehead of Saththi Nayanar, he had another kind of rude trait also. Though it was rude that also was on account of the love towards Devotees of Siva only. If anyboby had spoke ill of either Lord Shiva or His Adiyars in dispraise, he would cut their tongue and threw away. He always had kept with him a knife and a nipper for cutting the tongue. He attained the Holy feet of Ambalavanar and revered as Saththi Nayanar.






47. ஐயடிகள் காடவர்கோன் நாயனார்
(ஐப்பசி - மூலம்)

காஞ்சிபுரத்தில் அவதரித்து அரசாட்சி செய்து வந்த ஐயடிகள் சிவனடியார்களுக்கு தனது நாட்டில் பெரும் மதிப்பினையும் உயர்வான வாழ்க்கையும் கொடுத்து வந்தார். பகைமை நாட்டிலிருந்து சிவனடியார்கள் வந்தால் கூட அன்பும், அருளும் செலுத்தி உபசரித்து வந்தார். சிவநெறியில் ஆட்சி புரிந்த ஐயடிகள் ஆட்சியைத் துறந்து மகனுக்கு முடிசூட்டி விட்டு சிவநெறியில் நின்று திருத்தொண்டினை விரும்பிச் செய்யலானார். ஐயடிகள் சிவபெருமான் கோயில் கொண்டிருக்கும் திருக்கோயில்கள் எல்லாவற்றையும் தரிசித்து வணங்கி ஒவ்வொரு திருத்தலத்தின் மீதும் ஒவ்வொரு வெண்பா பாடி துதித்தார். தமிழகத்தில் மட்டுமல்ல எங்கெல்லாம் சிவாலயங்கள் இருக்கின்றதோ அங்கெல்லாம் சென்று இறைவனை வணங்கி மக்களிடம் இறைப்பணியையும் ஆற்றி வந்தார். இச்செயல்களால் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் எனப்பட்டார்

47. AIYADIGAL KADAVAR KON NAYANAR
(Aiyppasi - Moolam)

Aiyadigal was born at Kanchipuram. He was a ruler and he gave the Devotees of Siva a grand life and great respect in his country. Eventhough Devotees of Siva came from an enemy country, he used to treat them hospitably rendering love and kindness. Aiyadigal who ruled the country on the basis of tenets of Lord Shiva, abdicated from the throne and crowned his son liked to serve Thiruthondu following the principle of Shiva tenets. Aiyadigal worshipped all the Holy Temples of Lord Shiva and had sung a Venba (Sacred verse of four lines) on each Thiruththalam (Holy Temples) and worshipped. Not only in Tamil Nadu but in all Shivalay he worshipped Lord and rendered spiritual service among the people. Because of these acts he was revered as Iyadigal Kadavar Kon Nayanar.







48. கணம்புல்ல நாயனார்
(கார்த்திகை - கிருத்திகை)

வாழப்பாடி அருகே 6 கி.மீ தொலைவில் அமைந்துள்ள இருக்கு பேளூரில் அவதரித்த கணம்புல்லர் சிவபெருமான் திருக்கோயிலுக்கு திருவிளக்கேற்றி தவறாது துதித்து வந்தார். அவர் ஈசன் அருளால் வறுமையுற தன் வீட்டிலுள்ள எல்லாப் பொருட்களையும் விற்று திருப்புலிச்சர கோயிலில் விளக்கெரிக்கும் பணியினைச் செய்து வந்தார். வீட்டுப் பொருட்களும் தீர கணம்புல்லர் கணம்புல்லினை அறுத்து விற்று அதன் மூலம் கிடைக்கும் பணத்தினால் எண்ணெய் வாங்கி விளக்கேற்றி வந்தார். இதனால் இவர் கணம்புல்லர் எனப் பெயர் பெற்றார். ஒரு நாள் கணம்புல்லர் மெய்வருத்த புல்லை விற்க விலை போகாததால் புல்லால் விளக்கெரித்தார். ஆனால் அவ்விளக்கு முதல் ஜாமம் வரை எரிக்க இயலாததால் இரு வினையாகிய பாசத் தொடக்கினை எரித்தவராகிய கணம்புல்லர் தன் திருமுடியினை அன்பினால் எலும்பும் கரைந்துருக தீட்டி எரிக்க, சிவபெருமான் காட்சியருளினார். இவர் கணம்புல்ல நாயனார் எனப் போற்றப்பட்டார்.

48. KANAMPULLA NAYANAR
(Karthigai - Kiruthigai)

Kanampullar was born at Irrukkupelur which is 6km away from Vazhapadi. He used to worship the Lord Shiva by lighting the Thiruvilakku in the Thirukkoil. He became poverty stricken by the grace of Lord. He sold all his belongings in his home and performed the duty of lighting the Holy lamps at Thirupulichara Temple. As the house hold things ran out, he collected kanampul (A type of grass) and lit the lamps buying oil with the cash earned out of the sale. Thus he earned the name Kanampullar. Despite his earnest efforts one day he could not sell the grass. He lit the lamp with grass. But he was unable to light it upto the first quarter of the night (Mudal Jamam) and Kanampullar who had completed the twin action of bond of birth, had lit his Thirumudi (His holy hair) by burning that till the Charring of the bones with love. The Lord Shiva appeared and gave darshan. He is revered as Kanampulla Nayanar.





49. காரி நாயனார்
(மாசி - பூராடம்)

திருக்கடவூரில் அவதரித்த காரியார் சிவலிங்க வழிபாட்டைப் போற்றி வந்தவுடன் தன் தமிழ்ப்புலமையினால் சொற்கள் விளக்கமாகி உள்ளுறைப் பொருளாகிய வீடு பேற்றின் நிலை வெளித் தோன்றாமல் பொருள் மறைந்து கிடக்கும் படி காரிக்கோவை என்னும் தமிழ்நூலை இயற்றினார். இதையறிந்த சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் நட்பினைப் பெற்று அவர்கள் மகிழும் வண்ணம் பொருளுக்கேற்ற சொற்களை உரைநயம் பெறக்கூறி, அவர்களால் பெருஞ்செல்வங்களைப் பெற்று பல சிவாலயங்கள் கட்டினார். சிவனடியார்களை வரவேற்று உபசரித்தார். மேலும் பிறரிடம் சென்று பெறுவதில் கூச்ச உணர்வோடு இருக்கும் சிவனடியார்களின் வீடு சென்று பொன்னும் பொருளும் கொடுத்து உதவினார். தனக்குக் கிடைத்தவற்றையெல்லாம் சிவத்தொண்டிற்காகப் பயன்படுத்திய காரியார் காரி நாயனாராகப் போற்றப்பட்டார்.

49. KAARI NAYANAR
(Masi - Pooradam)

Kaariyar was born at Thirukadavur and revered the worship of Shivalingam. He authored a Tamill book Karrikovai, a spiritual dessertation with hidden treasure of ways and means to attain Bliss. He got the friendship of Chera, Chola and Pandya Kings when they came to know about his eminence and he explained the words in prose according to its meaning and made them enjoy. He had raised (built) several Shivalayas with the great wealth obtained from the Kings. He welcomed the Devotees of Siva and treated them well. Moreover he helped the Devotees of Siva who are hesitant in seeking help from others, by going himself to their home and gave them golds and valuables. He utilized, whatever the things he received, for the Sivathondu and thereby kaariyar is revered as Kaari Nayanar.





50. நின்ற சீர்நெடுமாற நாயனார்
(ஐப்பசி - பரணி)

மதுரையில் அவதரித்து மங்கையர்க்கரசியாரை மணந்த நின்ற சீர் நெடுமாறர் சமணர்களால் மனமாற்றம் செய்யப்பட்டு சமணத் தொண்டாற்றி வந்தார். பின்னர் ஒரு நாள் திருஞானசம்பந்தர் திருவடிகளை அடைந்து சைவத்தை மேற்கொண்டு கூன்பாண்டியராக விளங்கிய இவர் நின்ற சீர்நெடுமாறனாக சிவபெருமானிடத்தும், சைவ நன்னெறிகளிடத்தும் பக்தி கொண்டு திருப்பணி மேற்கொள்ள ஆரம்பித்தார். திருஞானசம்பந்தரால் பாண்டி நாடு முழுவதும் சிவமணம் பெருகுமாறு ஆட்சி செலுத்தினார். நெடுமாறனார் வடநாட்டுப் பகை அரசர்களை நெல்வேலி போர்க்களத்தில் வென்று வெற்றி வாகை சூடி, அரச படை வலிமையையும் நிலை நிறுத்திக் கொண்டவர். அருள்மிகு நெல்லையப்பர் காந்திமதியம்மன் சிவாலயத்தைக் கட்டிய மன்னராவார். அரசர் நெடுமாறர் சிவத்தொண்டுகளையெல்லாம் சிறப்புறும்படி விளங்கச் செய்து சிவபெருமான் திருவருளால் சிவலோகத்தினை அடைந்து நின்ற சீர்நெடுமாற நாயனாராகப் போற்றப்பட்டார்.

50. NINDRA SEER NEDUMARA NAYANAR
(Aiyppasi - Barani)

Nindra Seer Nedumaranar was born at Madurai and wedded to Mangayarkarasiyar. He was converted to follow Jainism by Jains. Later he came to Thirugnana Sambandar Thiruvadigal and embraced Saivism. Known as Hoon Pandiyan, he turned into Nindra Seer Nedumaran and got devotion towards Lord Shiva and holy tenets of Saivism and began to perform Thiruppani. He ruled the Pandiya kingdom with Sivamanam (The fragrance of Lord Shiva) through the Kingdom, by Thirugnana Sambandar. Nedumaranar conquered the North Indian enemy kings in the Neyveli battle field and crowned the throne and secured the strength of military. He was the king who built the Shivalaya of Arulmigu Nellaiappar - Kanthimathi Amman Temple. The King Nedumaranar performed the Sivathondu with great reverence and attained the Shivaloka by grace of Lord Shiva and revered as Nindra Seernedumara Nayanar.







51. வாயிலார் நாயனார்
(மார்கழி - ரேவதி)

சென்னையில் உள்ள திருமயிலையில் அவதரித்த வாயிலார் சிவபெருமானுக்குத் திருத்தொண்டு புரிவதில் பெரு விருப்புடன் விளங்கினார். வாயிலார் என்ற பெயர் இறைவனை அடைந்து நன்மை பெறுவதற்கு வாயிலாக (வாசற்கதவாக) இவர் உள்ளார் என்பதாகும். மறவாமையாகிய கருவினால் அமைந்த மனமாகிய கோயிலினுள்ளே சிவபெருமானை எழுந்தருள்வித்து நிலைபெற ஸ்தாபித்து அப்பெருமானை உணரும் ஞானம் என்கின்ற சுடர்விளக்கினை ஏற்றி பேரானந்தமாகிய திருமஞ்சனமாட்டி, அன்பு என்னும் திருவமுதை அமைத்து ஞானபூசையினை நாள் தோறும் செய்து வந்தார். இவ்வாறு வாயிலார் மனத்தில் அகப்பூசையினால் சிவபெருமானை அன்போடு நெடுங்காலம் வழிபட்டு சிவபெருமான் திருவடி நிழலை அடைந்தார். சிவபெருமானிடத்தும், சிவனடியார்களிடத்தும் பெரும் பக்தி கொண்டு திருத்தொண்டு செய்து வந்த இவர், வாயிலார் நாயனார் எனப்பட்டார்.

51. VAYILAR NAYANAR
(Margazhi - Revathi)

Vayilar was born at Thirumayilai in Chennai. He was very fond of performing Thiruthondu to Lord Shiva. His name Vayilar indicates that he is the Vayil (the gateway) to reach the lord and getting attainment. He treated his mind as the Temple where the unforgetfulness is the sanctum Sanctorum, in which he established Lord Shiva permanently and he lit the lamp of Gnana (The knowledge) which help perceive (Knowing) Lord Shiva, performed Thirumanjana of a eternal bliss and made the Thiruvamudhu of a love and performed the pooja of Gnana daily. Thus the Vayilar worshipped the Lord Shiva with love for long time by the pooja of inner soul and attained the Holy Feet of Lord Shiva. He performed the Thiruthondu with a great devotion to Lord Shiva and Devotees of Siva and revered as Vayilar Nayanar.







52. முனையடுவார் நாயனார்
(பங்குனி - பூசம்)

மயிலாடுதுறை அருகில் 3 கி.மீ. தொலைவில் உள்ள நீடுரில் அவதரித்த முனையடுவார் படைவீரர்களுக்குச் சேனாதிபதியாக இருந்தவர். அக்காலத்தில் வீரர்கள் ஒன்று கூடி ஓர் அமைப்பை உருவாக்கிக் கொண்டு அரசர்களுக்கு தேவைப்படும் போது போர்க்களத்திற்குச் சென்று நாட்டிற்காகப் போராடி வெற்றியைக் குவிப்பர். போரில் தோற்றவர்கள் மீண்டும் முனையடுவாரிடம் வந்து பெரும் பொருள் கொடுத்து அவரை நாடினால், நடுநிலையில் நின்று ஆராய்ந்து தோற்றவருக்காகப் போர் செய்து வெற்றியைத் தேடித் தருவார். முனையடுவார் பகைவர்களைப் போரில் வென்று பெற்றப் பொருட்களையெல்லாம் சிவனடியார்களுக்கு வழங்குவார். மற்றும் வெல்லம், நெய், கறி, தயிர், பால், பழம் முதலியவற்றுடன் திருவமுது அளித்து வந்தார். முனையடுவார் மெய்வருந்தக் கூலி பெற்றாலும் அதனை அடியார்களுக்கு அளித்து சிவத்தொண்டினைச் செய்து சிவநெறியில் நின்று ஈசனின் அருளைப் பெற்றவர். இச்சிறப்பால் முனையடுவார் நாயனாராகப் போற்றப்பட்டார்.

52. MUNAIYADUVAR NAYANAR
(Panguni - Poosam)

Munaiyaduvar was born at Needur which in 3 km. away from Mayiladuthurai. He was the chief-tain to the troops (Soldiers). At olden times, the soldiers would form a syndicate by getting together and would fight for the Kings in need of time in the battle field and would bring victory to the country. If the defeated would come to Munaiyaduvar to seek the support of him by offering great wealth analyse with a balanced mind and would fight for the defeated bringing victory for them. Munaiyaduvar would offer all the things he had earned by victory over the enemies in the battle, to the Devotees of Siva. He offered them the Thiruvamudhu with Vellam (Dried cake of sugar cane extract), Ghees, Curry, Curd, Milk and Fruits. Though Munaiyaduvar received salary by toiling physical work, he performed the Sivathondu by offering it to Adiyars and followed the tenets of Saivism and received grace of the Lord. Because of this greatness Munaiyaduvar was revered as Nayanar.





53. கழற்சிங்க நாயனார்
(வைகாசி - பரணி)

காஞ்சிபுரத்தில் அவதரித்த கழற்சிங்கர் ஒரு நாள் தன் ராணியுடன் திருவாரூர் புற்றிடங் கொண்ட சிவபெருமானை வணங்க ஆலயத்திற்குச் சென்றார். அப்போது ராணி கலையழகு மிக்க மண்டபத்தின் சிற்ப வேலைப்பாடுகளைப் பார்த்துக் கொண்டு வந்த போது வாசனை மிக்க மலர் ஒன்றை எடுத்து நுகர்ந்தார். அதைக் கண்ட செருத்துணை நாயனார் எம்பெருமானின் அழகு மேனிக்கு சூடி மகிழும் மலரை நுகர்வது கொடிய குற்றம். இனி இம்மலர்களை எப்படிச் சாற்றுவது என கோபம் கொண்டு ராணியின் மூக்கினை அறுத்து எடுக்க ராணி கீழே சாய்ந்தாள். சிவபெருமானைத் தரிசித்து விட்டு கழற்சிங்கர் அங்கு வர செருத்துணையார் நடந்ததைக் கூற மன்னர் "மலரை நுகர்ந்தது குற்றம் தான். முதலில் அம்மலரை எடுத்தது இவளது கை தான்". அதை வெட்டி வீழ்த்துவது தான் முறை என்று கூறி தனது வாளால் ராணியின் கரத்தினை வெட்டி வீழ்த்தினார். இச்செயலால் கழற்சிங்க நாயனாராகப் போற்றப்பட்டார்.

53. KALAR SHINGA NAYANAR
(Vaikasi - Bharani)

Kalar Shingar was born at Kanchipuram. One day he went to the Temple of Thiruvaroor Putridangonda Siva Peruman to worship the Lord with his queen. The queen was seeing the work of sculptures at the artful hall and she picked up a fragrant flower and smelt a flower. On seeing this Seruthunai Nayanar got angry as that was a sinful offence to smell the flower meant for adorning the beautiful body of Lord and how could that be adorned after that. He cut off the nose of the queen and she fell down. Kalar Shingar came there after worshipping Lord Shiva and Seruthunai Nayanar told him what had happened. Kalarshingar said "It is an offence to smell the flower, it is the hand that took the flower first and said it is proper to cut off her hand first "and cut off the hands of queen by his sword. Because of that he is revered as Kalarshinga Nayanar.





54. இடங்கழி நாயனார்
(ஐப்பசி - கார்த்திகை)

விராலிமலையில் இருந்து புதுக்கோட்டை செல்லும் வழியில் அமைந்துள்ள கொடும்பாளூரில் அவதரித்த இடங்கழியார் ஆட்சிக்காலத்தில் அடியார்களுக்குத் திருவமுது செய்விக்கும் திருத்தொண்டர் ஒருவர் திருவமுதிற்குரியப் பண்டங்கள் கிடைக்காமல் திண்டாடினார். மனம் வருந்திய அவர் திருவமுதிற்குரிய அரிசியைப் பெற வேண்டி இடங்கழியாரின் அரண்மனைக்குள் புகுந்து நெற்கூடத்திலிருந்து நெல்லைத் திருடக் காவலர்கள் அவரைப் பிடித்துக் கட்டி இடங்கழியாரின் முன் நிறுத்தினர். இடங்கழியார் அடியாரைக் கண்டு நடந்ததைக் கேட்க, அதற்கு அடியார் சிவனடியார்களுக்கு நான் திருவமுது செய்விக்கும் தொழில் முட்டுப்பட்டமையால் இவ்வாறு செய்தேன் என்று கூறினார். அதைக் கேட்டு இடங்கழியார் அடியாரை காவலினின்றும் விடுவித்து சிவனடியார்கள் நெற்பண்டாரம் மட்டுமின்றி மற்றைய நிதிகளின் பண்டாரங்களாகிய எல்லாவற்றையும் தடையின்றி எடுத்துச் செல்ல அனுமதித்தார். இச்செயலால் இவர் இடங்கழி நாயனார் எனப் போற்றப்பட்டார்.

54. EDANGAZHI NAYANAR
(Aiyppasi - Karthigai)

Edangazhiar was born at Kodumbaloor enroute to Pudukottai from Viralimalai. During his tenure of rule, a Thiruthondar who was serving the Adiyars Thiruvamudhu felt difficulty to find the raw materials for Thiruvamudhu. Grieved over this he entered the palace of Edangazhiyar to get the rice for Thiruvamudhu and stole the rice from the godown. The guards caught him up and tied and produced before Edangazhiyar. Edangazhiyar enquired the Adiyar about what had happened. He told that he had done so because of the crunch he faced with his service of offering Thiruvamudhu to Devotees of Siva. On hearing this Edangazhiar released the Adiyar from arrest and allowed him to take not only from the "Ner Pandaram (Paddy Store House)" but also all other kinds of "Pandarams" without any restriction. Because of that he was revered as Edangazhi Nayanar.



55. செருத்துணை நாயனார்
(ஆவணி - பூசம்)

கீழத்தஞ்சாவூரில் அவதரித்த செருத்துணை நாயனார் திருவாரூர் தியாகேசப்பெருமானின் ஆலயத்தில் திருப்பணி செய்து வரும் தருணத்தில் ஆலய வழிபாட்டிற்காக அரசன் காடவர்கோன் கழற்சிங்கனும் அவரது மனைவியும் வந்திருந்தனர். பேரரசி எம்பெருமானை வணங்காது, சிற்ப வேலைப்பாடுகளைக் கவனித்துக் கொண்டே வரும் பொழுது அங்கிருந்த பூவை எடுத்து முகர்ந்து பார்க்க மண்டபத்தருகே மாலையைக் கட்டிக் கொண்டிருந்த செருத்துணையார் அதனைக் கண்டு கோபம் கொண்டு, அரசி என்று கூட பார்க்காமல் ஆண்டவனின் அர்ச்சனைக்குரிய மலர்களை நுகர்ந்து பார்த்த குற்றத்திற்காக அவரின் தலைமுடியைப் பிடித்து கீழே தள்ளி மூக்கை தனது கத்தியால் அறுத்து விட்டார். பின்னர் அங்கு வந்த மன்னரிடம் நடந்ததைக் கூற மன்னன் தன் மனைவியின் மூக்கை அறுத்ததைக் கூட பொருட்படுத்தாமல் ஆண்டவன் மீது அடியார் கொண்ட பக்தியைக் கண்டு தலைவணங்க இவர் செருத்துணை நாயனாராகப் போற்றப்பட்டார்.

55. SERUTHTHUNAI NAYANAR
(Aavani - Poosam)

Seruththunai Nayanar was born at Keel Thanjavur. He was serving Thiruppani at Thiruvaroor Thiagesa Peruman Temple and at that time the king kadavar kon kalar Shingam and his wife came to the Temple for worship. The queen was coming looking at the sculptural work without worshipping the Lord and smelt a flower which was there. On seeing this Seruththunai Nayanar, who was weaving the garland near the mandapam got angry and he pushed her down by holding her hair, without considering the fact that she was the queen and cut her nose with his knife. Then he narrated the king who came there, about the events. The king bowed down before him on account of the devotion, the Adiyar had on the Lord, without minding the fact that he cut off his wife's nose. He is revered as Seruththunai Nayanar.




56. புகழ்த்துணை நாயனார்
(ஆவணி - ஆயில்யம்)

கும்பகோணத்திலிருந்து நாச்சியார் கோவில் செல்லும் வழியில் அமைந்துள்ள செருவிலிப்புத்தூரில் அவதரித்த புகழ்த்துணையார் தினமும் சிவபெருமானுக்கு அகம்படிமைத் தொண்டு புரிந்து வந்தார். உலகில் பஞ்சம் ஏற்பட, பசியால் வாடிய புகழ்த்துணையார் “எமது பெருமானை விடுவேன் அல்லேன்” என்று மலர்களைக் கொண்டும், நீரினைக் கொண்டும் பூசித்து வந்தார். ஒரு நாள் சிவபெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டும் பொழுது பசியால் தளர்ந்து திருமஞ்சனக் குடத்தை கை தவறி சிவபெருமானின் திருமுடி மீது வீழ்த்திச் சோர்ந்து விழ, அப்போது இறையருளால் சற்று உறக்கம் கொள்ள, ஈசன் கனவில் தோன்றி, “இப்பஞ்சம் தீரும் வரை இப்பீடத்தின் கீழ் உனக்கு நாள்தோறும் ஒரு பொற்காசு வைப்போம் அதை நீ பெற்றுக் கொள்வாயாக” என்று கூற விழித்தெழுந்த புகழ்த்துணையார் பொற்காசைக் கண்டு மகிழ்ந்தார். இவ்வாறு இறைவன் நாள்தோறும் அளித்த பொற்காசுகளைக் கொண்டு அகம்படிமைத் தொண்டு செய்து புகழ்த்துணை நாயனாராகப் போற்றப்பட்டார்.

56. PUGAZHTHTHUNAI NAYANAR
(Aavani - Ayilyam)

Pugazhththunai Nayanar was born at Seruviliputhur enroute to Nachiyar Koil from Kumbakonam. He performed "Agambadimai" (personal service) Thondu to Lord Shiva daily. There was a famine in the world and he reeled under hunger and he performed pooja to the Lord with flowers and water saying "I will not let my Lord down". One day, while he was performing "Thirumanjanam" (Daily bathing of idol) to Lord Shiva he slipped down the Thirumanjana pot at the Holy Feet of Lord Shiva due to hunger and tiredness and fell down. At the grace of Lord he got a nap and the Lord appeared in his dream and told "I will place a golden coin a day below this peetam (The Pedestal) until the famine ends, you can avail it". Awakened Pugazhththunaiar rejoiced on seeing the golden coin. Thus he performed the "Agambadimai Thondu" by using the golden coin gives daily by the Lord and is revered as Pugazhththunai Nayanar.






57. கோட்புலி நாயனார்
(ஆடி - கேட்டை)

திருவாரூர் அருகே அமைந்துள்ள திருநாட்டியத்தான்குடி எனும் ஊரில் அவதரித்து செந்நெல் சேமித்து சிவாலயங்கள் தோறும் உணவு வழங்கும் பணியை ஆற்றி வந்த கோட்புலியார் போருக்குச் செல்ல வேண்டியிருந்ததால் தனது சுற்றத்தாரிடம், "இந்நெல் எம்பெருமானுக்குரியது யாரும் பயன்படுத்தக் கூடாது" எனக் கூறிச் செல்ல அவ்வேளையில் பஞ்சம் வர, சுற்றத்தார் அந்நெல்லைப் பயன்படுத்தினர். போரில் வென்று திரும்பிய கோட்புலியார் உண்மை அறிந்து தன் உறவினர்களையெல்லாம் மாளிகைக்கு அழைத்து, அவர்களை நிற்கும்படி கட்டளையிட்டு தாய், தந்தை உட்பட அனைவரையும் இறைநெல் எடுத்ததற்காக வெட்டி வீழ்த்தினார். இறுதியில் ஒரு குழந்தையை வெட்ட முயலும் போது காவலாளி இக்குழந்தை நெல்லை உண்ணவில்லை என்று கூற கோட்புலியார் இந்த குழந்தை நெல்லை உண்ட பெண்ணின் பாலமுதை உண்டதல்லவா? என்று கூறி வெட்ட இறைவன் தோன்றி கோட்புலியாருக்குக் காட்சியளித்து அனைவரையும் உயிர்ப்பித்தார்.

57. KOTPULI NAYANAR
(Aadi - kettai)

Kotpuliar was born at Thirunattiyathankudi which is situated near Thiruvaroor and he was doing the service of offering food at Shivalayas daily after collecting " Sennell" (Red rice). He had to go for battle field and he advised his near and dear ones that "This paddy belongs to Emperuman (The Lord) and nobody should use it" and went away. At that time there came a famine and relatives used that rice. Kotpuliar returned after victory and came to know the truth and called up his relatives to the bungalow and ordered them to line up and severed them all down including his Mother and Father for usurping the paddy meant for Lord. Finally he tried to cut a child the guard told him that the child had not eaten the rice. Kotpuliar said that the child had been fed with the milk of that lady who ate the rice and cut the child. The Lord appeared and gave darshan to Kotpuliar and resurrected all them back to life.






58. பத்தராய்ப் பணிவார்கள்
(பங்குனி - கடைசி நாள்)

சிவபெருமான் திருவடிக்கே அன்பு பூண்டு பக்தியுடன் தவத்தோடு பணிபவர்கள் பத்தராய்ப் பணிவார் ஆவார். எவரேனும் அர்ச்சனை செய்வதைக் கண்டால் இனிது மகிழ்ந்து வணங்கிய அவர்களது அருள் நோக்கத்தால் பலரும் காணும்படிப் பயன்பெறுவார்கள். சிவபெருமானையும், சிவனடியார்களையும் தெவிட்டாத பெருவிருப்பத்தினால் மகிழ்ச்சி பொங்கப் பூசிப்பார்கள். பத்தராய் விளங்குவோர் தாம் செய்யும் செயல்கள் எதுவாக இருந்தாலும் அவையெல்லாம் “இறைவன் திருவடிக்கே சேரும் தகுதியுடையனவாகுக” என்று அன்பினோடு சிவப்பணிகளைச் செய்வார்கள். சிவனடியார்களைத் தொழுதல், சிவார்ச்சனை புரிதல், சிவபெருமானுக்கு நியமனத் தொண்டுகள் புரிதல், சிவசரிதம் கேட்டல், சிவபெருமானைத் தியானித்தல், எப்போதும் சிவனடியே சிந்தித்தல் ஆகிய செந்நெறியில் வாழ்வோர் பத்தராய்ப் பணிவார் ஆவார்கள்.

58. PATHARAIP PANIVARGAL
(PANGUNI - The Last Day)

Patharaippanivar are those who always had a love towards the Holy feet for lord Shiva and humbled with penance and devotion. They rejoice and worship on seeing anybody performing "Archana" and upon their devotional aim they participated in the graceness before the mass. They worship and praise the Lord Shiva and Devotee of Sivas with unsaturated willingness and with great joy. They being pathars always perform the Sivapani (service of siva) with love ascribe any service for the Holy Feet of Lord". Patharaippanivar are those who live on the right principles of worshipping Devotee of Sivas, performing Shiva archana, performing "Niyamana Thondu" (Personal religious duties) to Lord Shiva, giving ear to Shiva Charitam, Thinking Lord Shiva (Dyan), always placing the Holy Feet of Lord Shiva in the mind.






59. பரமனையே பாடுவார் அடியார்கள்
(பங்குனி - கடைசி நாள்)

முப்புரங்களை எரித்தவரும் பாம்புகளை ஆபரணமாக அணிந்தவரும் இணையற்ற பரம்பொருளாய் விளங்குபவரும் உலகமனைத்தையும் தமது மாய சக்தியால் உருவாக்கியவரும் கரணங்களால் காணப்படாதவராயினும் உலகில் நிறைந்து காட்டுபவருமாகிய சிவபெருமானையே பாடுபவர்கள் "பரமனையே பாடுவார்" ஆவார். தமிழ்மொழி, வடமொழி, பிரதேசமொழி இவற்றில் ஏதேனும் ஒன்றைக் கற்று பிரம்மனும், விஷ்ணுவும் காணப் பெறாத சிவபெருமானையே மெய்ப்பொருளாகக் கொண்டு, இயல் இசைப் பாடல்களை மெய்யுணர்வுடன் மனமுருகிப் பாடுவார்கள். இடைவிடாது பரமனையே சிந்திப்பார்கள். இவர்களே "பரமனையே பாடுவார்" என்னும் மெய்யடியார் ஆவர்.

59. PARAMANAIYE PADUVAR ADIYARGAL
(PANGUNI - The last day)

Paramanaiye Paduvar are those who worship praising the Lord Shiva, who burnt "Muppuram", who has snakes as garland, who being paramporul (The eternal spirit) with no parallel, who created the cosmic by His power of Maya, who though cannot be seen by the Karana's (the senses) pervading everywhere in the world. They are the Persons who learnt one of languages among the Tamil, Vadamozhi (Devanagiri) and vernacular and worshipped Lord Shiva with true spirit soulfully, by singing 'Iyal Isai' songs making the Lord Shiva as the Holy Subject, who had not been seen by Brahma and Vishnu. They always keep the Paraman (The Lord) in the mind, uninterruptedly (without cessation). These are Meiyadiyars (True Devotees) called as" Paramanaiye Paduvar".






60. சித்தத்தை சிவன்பாலே வைத்தார்கள் (பங்குனி - கடைசி நாள்)

உயர்பற்று அற்றுச் சிவனையே சிந்திப்பவர் மூலாதாரத்தில் இருந்து குண்டலினியை ஆரூதாரம் வழியே மேலேற்றுவார்கள். பிரம்மேந்திரத்தின் மேல் ஆயிரத்தெட்டு இதழ்த் தாமரை மீது நடிக்கும் தெய்வத்திருநடனம் கண்டு ஆனந்த அமுதுண்டு களிப்பார்கள். பிரம்மன், விஷ்ணு, உருத்திரன், மகேசன், சதாசிவம் என்ற காரணக் கடவுளர் ஐவருக்கும் முறையே உரிய இருதயம், கண்டம், உள்நாக்கு, புருவமத்தி, பிரம்ம மந்திரம் என்ற ஸ்தானங்களைக் கடந்து மேலே சென்று நிறைவுடையதாய், மெய்ப்பொருளாய், சுடர்சோதியாய் உள்ள ஒளிமயமானது ஞானஒளி வீசித் திகழும் நாதாந்தத்தில், சிவயோக நெறியில் சித்தத்தை சிவன்பாலே வைத்திருப்பார்கள். இவ்வாறு பொன்னம்பலத்தில் திருக்கூத்தாடும் சிவபெருமானுடைய திருத்தொண்டின் வழியிலே நின்று அவரை அடைந்தவர்கள் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்கள் ஆவார்கள்.

60. CITHTHATHTHAI SIVANPALE VAITHARGAL (PANGUNI - The last day)

Those who think Shiva, detaching from attachment would bring up the Kundalinii from the source through Arootharam. They would rejoice taking the "Anantha Amudhu" on seeing the cosmic dance (Thir Nadanam of Lord) on the Lotus having thousand and eight petals which is placed on head of Brahmamandiram. Thay pass through the Sthanas (the stages) like Heart, Kanda, uvula, the centre of eye brows and Brahmamandiram which are respectively belongs to Five affiliated Lords of Brahman, Vishnu, Rudra, maheshan, Sadhasivam and going up to the absolute one the true spirit, the resplendent with great light, the Nathanantha which spreads the light of knowledge (Gnana oli) and through Siva Yoga Neri (On principle of Siva Yoga) would place the ciththam (the mind) on the Lord Shiva. Thus they, the Ciththaththai Sivanpale Vaithavargal stayed on the principles of Thiruthondu of Lord Shiva, who is dancing (Koothaduthal) in Ponnambalam and attained him.







61. திருவாரூர்ப் பிறந்தார்கள்
(பங்குனி - கடைசி நாள்)

உருவமற்றவராகவும், உருவமுடையவராகவும் எல்லாப் பொருளுமாகி நின்ற பெருமானும் உமாதேவியாரின் மணவாளருமாகிய சிவபெருமான் மனமகிழ்ந்து வீற்றிருக்கும் திருவாரூரில் பிறந்தவர்கள் திருக்கயிலாயத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானின் கணங்களேயாவார்கள். ஆகையால் ஐம்பொறிகளையும் அடக்கி அவர்களுடைய திருவடிகளை வணங்கி ஒருமனப்பட்டவர்க்கே உயர்ந்த நன்னெறியாகிய வீடு கட்டுவதாகும். மிக்க தனமுடையவர்களாகவும், முன் செய்த தவப் பயனுடையவர்களாகவும், உலகப்பற்று அற்றவராகவும், சிவகணநாதர்களாகவும் கருதப்படுவாரே திருவாரூர்ப் பிறந்தவர்கள் எனப்படுவர்.

61. THIRUVAROOR PIRANTHARGAL
(PANGUNI - The Last Day)

The Lord Shiva, who is everything with form and without, the Manavalar (The Holy husband) of Uma Devi, and is residing at Thiruvaroor happily and those who are born at Thiruvaroor are the Ganangal themselves of Lord Shiva of Thirukayilai. Hence those who converged on soul, controlling five senses and worshipping the Holy Feet of Lord Shiva alone can be shown the rightful attainment. The Thiruvaroor piranthargal (those born at Thiruvaroor) are wealthy due to their past merits and had renounced the temporal world are considered as Shiva Gana Nathars.







62. முப்போதும் திருமேனி தீண்டுவார்கள் (பங்குனி - கடைசி நாள்)

உயிர்களிடத்து எக்காலத்திலும் அன்பு கொண்டவராகிய சிவபெருமானைச் சிவ ஆகம விதிமுறைகள் தவறாத வண்ணம் ஆசையும், அன்பும் பெருக, காலை, நண்பகல், மாலை என்ற மூன்று காலத்திலும் அர்ச்சனை செய்பவர்கள், ஆதி சைவ முனிவர்கள் ஆவார்கள். முன் கூறிய மூன்று காலத்திலும் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆக மூன்றாகப் பகுக்கப்படும் எக்காலத்திலும் வழிவழியாக அர்ச்சனை செய்யும் திருத்தொண்டானது சிவ வேதியர்களுக்கே உரியதாகும். சிவாலயத்தில் விதிமுறைப்படி பூசை செய்யும் சிவாச்சாரியார்களே முப்போதும் திருமேனி தீண்டுவார் எனப்படுவர். இவர்கள் அதிகாலையில் நீரில் மூழ்கி நீராடுவர். திருநீறு பூசிக் கொள்வர். சத்தியா வந்தனம் செய்வர். சிவலிங்கம் முதலான திருமேனிகளை முப்போதும் தீண்டி பூசை புரிவர். இவர்களே முப்போதும் திருமேனி தீண்டுவார் ஆவர்.

62. MUPPOTHUM THIRUMENI THEENDUVARGAL (PANGUNI - The Last Day)

Ancient Saiva munis are those who performed worship with rituals with love and affection at all three times namely viz. Morning, Noon and Evening without deviation from the Saiva Tenets of Lord shiva who is ever compassionate towards living beings. These three times are divided into past, present and future and Performing rituals accordingly is the exclusive service of Saiva Priests. Shivacharyas (Priests of Shiva Temples) are only known as "Muppothum Thirumeni Theenduvar". They take deep bath early in the morning. They wear holy ash. They perform Sandya Vandhanam (worship at any of the three stated periods). They touch and perform Pujas for Shiva Peruman and like other bodies in all the three stated periods. These are only "MuppothumThirumeni Theenduvar".





63. முழுநீறு பூசிய முனிவர்கள்
(பங்குனி - கடைசி நாள்)

சிவபெருமான் அருளிச் செய்த சிவாகமங்களினுள்ளே “அகற்பம்” என்ற ஒரு வகையை நீக்கி, கற்பம், அநுகற்பம், உபகற்பம் என்ற மூவகை திருநீற்றில் ஒன்றைச் சிறிது கையிலெடுத்து அகமும், புறமும் சுத்தம் உண்டாகும்படி பாவித்து தெற்கில் அத்திர மந்திரத்தினால் தெரிந்த பின்பு திருநீற்றை உத்தூளனமாக வேணும், மூன்று பிரிவுகளாக வேணும், பிறை வடிவமாக வேணும் பூசிக் கொள்ள வேண்டும் சிவசந்நிதி முன்பும் ஓமத்தீயின் முன்பும் குருவின் முன்னிலையிலும் தூய்மையற்ற இடங்களிலும் திருநீற்றை அணியலாகாது. தத்துவநெறி உணர்ந்தவர்கள், நீதி நெறி பிழையாகாதவர்கள் மும்மலங்களையும் அறுத்த முனிவர்கள் முதலியோர் சிவகாம விதிப்படி பெற்ற திருநீற்றை புதிய பாத்திரத்தில் வைத்து சிவபெருமானை வணங்கி திருமேனி முழுவதும் பூசுபவர்கள் முழுநீறு பூசிய முனிவர்கள் ஆவர்.

63. MUZHU NEERU POOSIA MUNIVARGAL
(PANGUNI - The Last Day)

Among the four kinds of Sacred Ashes prescribed by Lord Shiva in Sivagamas, avoiding "Akarpam" (Sacred Ashes found in nature), a little of any one of three kinds namely "karpam" (Sacred ashes prepared according to Agamas from cow dung received directly from the cow, by hand), "Anukarpam" (Sacred ashes prepared according to Rule from cow dung picked up in pasture lands), "Upakarpam" (Sacred ashes taken from natural forest fire or from artificially made brick or kiln fire and prepared according to rule), praying cleanliness internally and externally realizing the Attira Mantira (That which is unstable) apply the Sacred ashes as Udulanam (besmearing parts of one's body with dry sacred ashes), or in three divisions or in the shape of crescent. Sacred ashes shall not be applied in front of sanctum sanctorum of shiva, in front of sacrificial fire, in front of preceptors and in unclean places. Those who have realized the Doctrine, those who have not transgressed justice and law and those who have severed the three impurities (Anavam, Kanman and Maya) after obtaining sacred ashes as per Agamas, Keep in a new vessel, worship lord Shiva and then besmear in the entire boby. They are known as Muzhu Neeru Poosiya Munivargal.




64. அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்கள் (பங்குனி - கடைசி நாள்)

சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களின் நாடாகிய தமிழ் வழங்கும் நாடுகளுக்கு அப்பாலுள்ள நாடுகளில் தோன்றி சிவவழிபாட்டை மேற்கொண்டும் சிவத்தொண்டு புரிந்தும் சிவபெருமானுடைய திருவடியை அடைந்தவர்களும், திருத்தொண்டர் தொகையிலே சொல்லப்பட்ட திருத்தொண்டர்களாகிய தனியடியார்களின் காலத்துக்கு முன்னும் பின்னும் சிவபெருமான் திருவடிகளைச் சார்ந்தவர்களும் அப்பாலும் அடிசார்ந்தார் ஆவர். அப்பாலுள்ள நாடு என்பது தமிழ்நாடு அல்லாத பல நாடுகள் ஆகும். இந்நாடுகளிலும் சிவனடியைச் சார்ந்த திருத்தொண்டர்கள் உண்டு என்பதாகும்.

64. APPALUM ADISARNTHAR ADIYARGAL (PANGUNI - The Last Day)

Those who have taken to the worship of Lord Shiva and attained the Holy feet of Lord Shiva by performing Sivathondu being born at places beyond the Tamil Nadu of Moovendars of Chera, Chola and Pandya countries and those who attained the Holy Feet of Lord Shiva, before and after the period of Thaniadiyars of Thiruthondars stated in the Thiru Thondar Thogai, are Called Appalum Adi Sarnthar. Appallula Nadu means the countries other than the Tamil Nandu. It means that there are Thiruthondars who had attained the Holy Feet of Lord Shiva were in these countries also.



65. பூசலார் நாயனார்
(ஐப்பசி - அனுக்ஷம்)

சென்னையில் உள்ள பூந்தமல்லி அருகே 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள திருநின்றவூரில் அவதரித்த பூசலார் நீண்ட நாட்களாக அவ்வூரில் சிவபெருமானுக்கு ஒரு கோவிலைக் கட்ட எண்ணினார். அதற்குரிய பொருட்கள் கிடைக்காததால் தன் மனதிற்குள்ளே கோயிலைக் கட்டி பின்னர் தன் மனத்தால் கட்டிய கோயிலில் சிவபெருமானை ஸ்தாபிக்க நல்ல வேளையும் குறிப்பிட்டார். இது இவ்வாறிருக்க மன்னர் கழற்சிங்கர் காஞ்சிபுரத்தில் கற்கோயில் கட்டி அதில் சிவபெருமானை ஸ்தாபிக்க ஒரு நாளையும் நேரத்தையும் நியமிக்க, அதற்கு முதல் நாள் சிவபெருமான் கழற்சிங்கரின் கனவில் தோன்றி, திருநின்றவூரில் பூசலார் கட்டிய ஆலயத்தினுள் புகுவோம். ஆதலால் உனது ஆலய பிரதிஷ்டையை வேறொரு நாள் வைத்துக்கொள் எனக் கூற மன்னர் பூசலாரின் வீட்டிற்கு சென்று வணங்கி, நீங்கள் கோயில் கட்டியிருப்பதை எம்பெருமான் கனவில் சொன்னார் என்று கூற, பூசலாரும் தன் மன ஆலயத்தில் சிவபெருமானை ஸ்தாபித்து பூசைகளையெல்லாம் செய்து சிவனருள் பெற்றதால் பூசலார் நாயனார் எனப்பட்டார்.

65. POOSALAR NAYANAR
(Aippasi - Anusham)

Poosalar was born at Thirunindravoor which is situated 5 km. away from Poonthamally in Chennai. He wished to build a Temple for Lord Shiva in that village. As he did not avail the materials for that he built a Temple within his heart (Mind). Then he fixed an auspicious day and time to install Lord Shiva into the Temple built in his mind. In the meantime the king Kalarshingar had built a stone temple at Kanchipuram and fixed a auspicious day and time to establish the Lord Shiva in that. The Lord appeared in the dream of Kalarshingar on the day before it and told him that "I will enter into the Temple built by Poosalar at Thirunindravoor. Hence you may fix another day for the Pradishta (installation) of your Temple". The King went to the house of Poosalar and narrated that the lord had told in his dream about the Temple he had built. Poosalar had established Lord Shiva in his mind temple and performed Poojas and he is revered as Poosalar Nayanar as he was graced by Lord Shiva.





66. மங்கையர்க்கரசியார்
(சித்திரை - ரோகிணி)

கும்கோணத்திலிருந்து பட்டீஸ்வரம் செல்லும் வழியில் அமைந்துள்ள பழையாறை வடதளி எனும் ஊரில் அவதரித்த மங்கையர்க்கரசியார் பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறனை மணந்து சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தார். அச்சமயத்தில் நெடுமாறன் சமணர்களால் மனமாற்றம் செய்யப்பட்டு சமண மதத்தைப் பரப்பி வந்தார். சைவ மரபில் தழைத்தோங்கிய மங்கையர்க்கரசியார் தன் கணவரை மீண்டும் சைவ சமயத்திற்கு வரச் செய்ய முயற்சித்தார். எனினும் பயன் இல்லை. ஆயினும் தன்னால் இயன்ற அளவு சிவனடியார்களுக்கும், சிவாலயங்களுக்கும் தொண்டும் புரிந்து வந்தார். அந்நிலையில் திருஞானசம்பந்தர் மன்னர் மாளிகைக்கு வர மங்கையர்க்கரசியார் அன்புடன் வரவேற்று கணவன் நெடுமாறரைச் சந்திக்க வைத்தார். சம்பந்தரது தத்துவார்த்த விளக்கத்தையும் உரையாடல்களையும் கேட்டு நெடுமாறர் சமணத்தை விடுத்து மனம் மாறி சைவம் தழைத்தோங்கப் பாடுபட்டார். தனது கணவரைச் சைவராக மாற்றிய திருதொண்டினால் மங்கையர்க்கரசியாரும் நாயனாராகப் போற்றப்பட்டார்.

66. MANGAIYARKARASIYAR
(Chithirai - Rohini)

Mangaiyarkarasiyar pandiya was born at Palaiyarai Vadathali enroute to Pattiswaram from Kumbakonam. She was wedded to pandiya king Nindraseer Nedumaran and lived a grand life. At that time Nedumaran was converted to jainism by jains and he was spreading it. The Mangayarkarsiyar who was well versed in the Saiva tenets, tried to re-convert her husband to Saivism. But it proved futile. Nevertheless she performed service to Devotee of Sivas and Shivalayas. Under these circumstances Thirugnana Sambandar came to the palace of he king. Mangaiyarkarasiyar welcomed him and made him to meet her husband Nedumaran. Nedumaran left jainism on the Philosophical explanations and the interactions of Sambandar and converted back to Saivism and dedicated himself for the revival of Saivism. As she performed the Thiruthondu of converting her husband as Saivaite Mangayarkarasiyar also was revered as Nayanar.



67. நேச நாயனார்
(பங்குனி - ரோகிணி)

ஆந்திர மாநிலம் காம்பிளி எனும் ஊரில் அவதரித்த நேசர் நெசவுத் தொழிலில் சிறந்தவராயினும் சிவனடியார்களின் திருவடிகளைத் தலையில் வைத்து ஆடித் துதிக்கும் அன்புடையவராயும் விளங்கினர். நேசர் தம்மனத்தில் செயலனைத்தையும் சிவபெருமானது திருவடித் தாமரைக்காக ஆக்கினார். தம் வாக்கின் செய்கையினை திருமந்திரமாகிய திருவைந்தெழுத்திற்காக ஆக்கினார். தாம் மேற்கொள்ளும் கைத்தொழிலின் செய்கையினைச் சிவனடியார்களுக்காக ஆக்கும் வகையில் ஆடை நெய்து சிவனடியார்கள் வேண்டியபடியே அளித்து வந்தார். இது போன்று சிவனடியார்கள் விரும்பியவாறே ஆடையும் கீளும் கோவணமும் இடையறாமல் கொடுத்து நாள்தோறும் அவர்களுடைய திருவடிகளை வணங்கி, துதித்து நன்மையினைப் பெற்று சிவபெருமானது திருவடி நிழலினை அடைந்தார். இவ்வாறு சிவத்தொண்டு செய்ததின் பொருட்டு சான்றோர்கள் நேசரை "நேச நாயனார்" என அழைத்தனர்.

67. NESA NAYANAR
(Panguni - Rohini)

Nesar war born at Kambli in Andhra Pradesh. Though he was a weaver by profession and thriving in that he was also very fond of Siva Devotees and would carry their holy feet to his head and dance with great love. His mind was obsessed with the thought of Holy Lotus feet of the Lord. His action of words pronounced the holy mantra of Five Letters. He weaved for Devotees of Siva and gave it to them as they wish, in order to make his vocation to be a submission to Devotees of Siva. Likewise he gave the Devotees of Siva the dress and the loins as they wish without any interruption and worshipped their holy feet daily and praised and thereby he got goodness and attained the Holy Feet of Lord Shiva. His Sivathondu made the greatmen call him as "Nesa Nayanar".



AR. ராமநாதன்







68. கோச்செங்கட் சோழ நாயனார் (மாசி - சதயம்)

திருவானைக்காவலில் ஒரு வெண்நாவல் மரத்தின் கீழிருந்த சிவலிங்கத்தை ஒரு யானை தன் துதிக்கையால் திருமஞ்சனமாட்டி பூச்சூட்டி வழிபட்டு வர, இத்தலத்தில் ஒரு சிலந்தி ஈசன் திருமுடியின் மேல் வெப்பம் படாதிருக்க பந்தல் செய்தது. இதைக் கண்ட யானை அச்சிலந்தியின் வாயில் உள்ள எச்சிலால் உருவானது அப்பந்தல் என்றெண்ணி அதனை அழிக்க சிலந்தி கோபம் கொண்டு யானையின் துதிக்கையினுள் புகுந்து கடிக்க வலி தாங்காமல் யானை துதிக்கையைத் தரையில் அடிக்க யானையும் சிலந்தியும் இறந்தன. இரண்டுமே சிவனை துதித்தல் பொருட்டு மோதலில் இறந்ததால் ஈசன் யானைக்கு முக்தியும், சிலந்தியைச் சுபதேவர் கமலவதியாருக்கு மகனாகப் பிறக்கவும் அருளினார். அக்குழந்தை கோட்செங் கண்ணனாக வளர்ந்தது. மேலும் கோட்செங்கண்ணன் திருவானைக்காவலில் தர்ம திருவருள் பெற்று வெண்ணாவல் மரத்துடன் கோயில் கட்டி, சிவத்தொண்டு புரிந்ததால் நாயனாராகப் போற்றப்பட்டார்.

68. KOCHENKATT CHOLA NAYANAR (Masi - Sadayam)

At Thiruvanaikaval an elephant was performing Thirumanjanam by its trunk to a Shiva Lingam, which was situated under a "Ven Naval"(Jambo) Tree and worshipped adorning it by flowers. A Spider on that Holy place, weaved a web to prevent the sunshine heat from falling upon the Thirumudi of Lord. On seeing this the elephant felt that the web was formed by the saliva of the spider and destroyed it. The spider got angry and entered into the trunk of the elephant and bit it. The elephant beat its trunk on the ground out of pain and both died. Both died due to fight to worship Lord Shiva and the Lord graced the elephant the Bliss and graced the spider to be born as a son to Suba Devar and Kamalavathiar. The child was brought up as Kotchengkannan. Moreover Kotchengkannan got the grace of Lord (Tharuma Thiruvarul) at Thiruvanaikaval and built a Temple along side "Ven Naval" Tree and performed the Sivathondu and was revered as Nayanar.






69. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்
(வைகாசி - மூலம்)

விருத்தாசலம் அருகில் இராஜேந்திரப்பட்டினம் என்று அழைக்கப்படும் அடியார்கள் எருக்கத்தம் புலியூரில் அவதரித்த திருநீலகண்டரும், மனைவி மதங்கசூளாமணியும் மதுரை திருவாலவாய் கோவில் வாயிலைச் சார்ந்து நின்று யாழினை மீட்டி சிவபெருமானின் புகழினைப் பாட அதைக் கேட்டு மகிழ்ந்த ஈசன் திருத்தொண்டர்கள் கனவில் தோன்றி, "பாணரைத் தம் திருமுன் அழைத்து வருக" என்று கூற, மறுநாள் அடியார்கள் பாணரைச் சொக்கலிங்கத்தின் முன் அழைத்துச் செல்ல பாணர் கூடற்பெருமானின் திரிபுர வரலாற்றையும் யாழினால் இசை அமைத்துப் பாட அப்போது ஈசன் அசரீரியாக "பாணர் இசைக்கின்ற சந்தயாழ் தரையிலுள்ள சீதம் தாக்கினால் அதன் நரம்புகளில் இறுக்கம் குறைந்து இனிமை குறையும். அதனால் இவருக்கு பொற்பலகையினை இடுக எனக் கூற அவ்வாறு செய்யப்பட்டது.

69. THIRUNEELA KANDA YAZHLPPANA NAYANAR
(Vaigasi - Moolam)

Thiruneelakandar was born at Rajendran Pattinam alias Adiyargal Erukkatham Pulioor, which is near to Virthachalam. He and his wife Madhangasulamani, were playing 'Yazh' (a type of string music instrument) at the entrance of Madurai Thiruvalavai Temple and sang in praise of Lord Shiva. The Lord was pleased on hearing that and appeared in the dream of Thiruthondars and told them to bring the Panar before Him. The next day the Adiyars brought the Panars before Chokkalingam and the Panar had sung the history of Tiripura of Lord Koodal Peruman by accompanied by 'Yazh'. At the time the Lord in His eternal voice told that "If the santha Yazh which is played by the Panar is affected by the dampness on the floor, the string would lose its temper and music from it will lose its charm, hence place him with a golden platform" and it was done as ordered.






70. சடைய நாயனார்
(மார்கழி - திருவாதிரை)

திருநாவலூரில் அவதரித்த சடையனாரும் மனைவி இசைஞானி அம்மையாரும் சிறந்த சிவபக்தர்கள். சைவநெறி தழைத்தோங்க தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் சிவபெருமானுக்கும், சைவத்திற்கும், தமிழுக்கும் அர்ப்பணித்த சுந்தரமூர்த்தி நாயனாரின் தகப்பனார் ஆவார். சடையனார் தன் மகன் சுந்தரர் வைசத் தொண்டாற்றி சிவபெருமானுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென விரும்பினார். அதற்கேற்ப தன் மகனைச் சிறுவயதிலிருந்தே வளர்த்து வந்தார். சடையனார் சுந்தரருக்கு இட்ட பெயர் நம்பியாரூரன் என்பது ஆகும். தகப்பனார் விருப்பப்படியே சுந்தரரும் சிவபெருமான் மீது பற்றும் பக்தியும் கொண்டு சிவப்பணிகள் பல வாழ்நாளில் செய்தார். சுந்தரமூர்த்தி நாயனார் என்கிற பெரிய திருத்தொண்டரை உலகுக்குப் பெற்றுத் தந்த காரணத்தினால் சடையனாரும் நாயனாராகப் போற்றப்பட்டார்.

70. SADAYA NAYANAR
(Margazhi- Thiruvathirai)

Sadayanar was born at Thirunavalur. He and his wife Isaignani Ammaiyar were great Shiva Devotees. He was the father of Sundara Moorthy Nayanar, who dedicated his body, wealth and soul to Lord Shiva, Saivism and Tamil and growth of Saiva Neri (Saivism). Sadayanar wished his son Sundarar to serve Lord Shiva, by serving Saivam. He raised his son from the childhood accordingly. Sadayanar christened Sundarar as Nambiarooran. As per the wishes of his father Sundarar was devoted and attached towards the Lord Shiva and performed services to Lord Shiva (Sivapanigal) during his life time. On account of giving the world the great Thiruthondar Sundara Moorthy Nayanar, Sadayanar also was revered as Nayanar.






71. இசை ஞானியார்
(சித்திரை - சித்திரை)

திருவாரூரில் அவதரித்த இசைஞானியார் சடையநாயனாரை மணந்து, உலகம் உள்ளவரை சைவத் தொண்டர்களின் முதன்மையராகிய சுந்தரமூர்த்தி நாயனாரைப் பெற்றெடுத்தார். சைவம் போற்றும் விதத்தில் வளர்த்து அவருக்கு திருத்தொண்டாற்றும் பெருமைகளை ஒரு சேர வைத்த பெரும் பேறு இசைஞானியாரையே சேரும், சுந்தரமூர்த்தி நாயனாரைப் பெற்றெடுத்தமையால் இசைஞானியாரும் நாயன்மார்களுள் ஒருவராகவும், பெண் நாயன்மார்களுள் மூன்றாமவராகவும் போற்றப்படுகிறார். இசை ஞானியம்மையாரை நம்பியாண்டார் நம்பிகள் “ஆரூர்ப் புனித அரண் திருத்தாள் தன் உள்ளத்து நயந்தாள்” எனப் போற்றுவர்.

71. ISAI GNANIAR
(Chithirai - Chithirai)

Isai Gnaniar was born at Thiruvaroor and wedded to Sadayanayanar and gave birth to Sundara Moorthy Nayanar, who would be the chief (Principal) of Saiva Servants (Saiva Thondargal) forever. She raised him according to Saivism and set him to have the goodness of performing the Thiruthondu. The credit of these belong to the Isai Gnaniar. On account of giving birth to Sundara Moorthy Nayanar, Isai Gnaniar was revered as one of the Nayanmars and the third among the female Nayanmars. Nambiyandar Nambi praised Isaignaniar as ‘She fortified the holy feet of Saintly Aran (Sivan) of Aaroor in her bosom”.




72. சுந்தரமூர்த்தி நாயனார்
(ஆடி - சுவாதி)

திருநாவலூரில் அவதரித்த நம்பியாரூரர் என்ற சுந்தரமூர்த்தியார் சடங்கவி சிவாச்சாரியார் மகளை மணக்க, மணமகன் கோலத்தில் திருமணம் நடக்குமிடத்திற்கு வர அப்போது கிழவர் ஒருவர் அங்குள்ள அனைவரையும் பார்த்து நம்பியாரூரன் எனக்கு அடிமை என்று கூறி, அதற்கு சாட்சியாக நம்பியாரூரன் பாட்டனார் கையொப்பம் இட்ட ஓலையை அனைவரிடமும் காட்ட, நம்பியாரூரர் கோபத்துடன் பித்தனென்று கூறி ஓலையைக் கிழித்துப் போட்டார். அதற்கு கிழவர் இது நகல்தான். மூலம் திருவெண்ணெய்நல்லூரில் இருப்பதாகக் கூறி அனைவரையும் அழைத்துச் சென்று ஓலையின் மூலத்தைக் காட்ட கண்ணுற்ற அனைவரும் நம்பியாரூரர் இம்முதியவர்க்கு அடிமை என்று கட்டளையிட்டனர். பின்னர் அப்பெரியவர் திருவருட்டுறை சிவாலயத்திற்கு நம்பியாரூரை அழைத்துச் சென்று மறைந்தார். தன்னிடம் வன்மை பேசியதால் வன்தொண்டன் எனவும், பித்தன் எனக் கூறியதால் பித்தா எனப் பதிகம் பாடுமாறும் அசரீரி கேட்க நாயனாரும் பித்தா பிறைசூடி எனப் பாடினார்.

72. SUNDARA MOORTHY NAYANAR
(Aadi - Swathi)

Sundara Moorthiar alias Nambiaroorar was born at Thirunavalur. He was proceeding as bridgegroom to marry the daughter of Sadangavi Sivachariyar At that time an elderly man addressed the gathering that Nambiarooran was his slave and showed them all, the palm leaf supposed to be signed by his grandfather in support of his claim. Nambiaroorar got angry and tore off that palm leaf saying he was mad. Then the aged one told that was a copy alone and the original was at Thiruvennnainallur and brought them all to there and showed the original. On seeing that all of them ordered Nambiaroorar as to be his slave. Then the elderly man took Nambiaroorar to the Shivalaya at Thiruvaruturai and disappeared. Then a eternal voice was heared to sing a hymn as Vanthondan (hard servant) as he talked (spoken of) harshly to Him and a hymn as Piththa (the fond about) as he addressed him Piththa. Nayanar rendered the hymn "Piththa Pirai Soodi".






73. மாணிக்கவாசகர்
(ஆனி - மகம்)

சமயக்குரவர் நால்வரில் ஒருவரான மாணிக்கவாசகர் திருவாதவூரில் பிறந்தார். வாதவூரார் எனவும் அழைக்கப்படுகிறார். அரிமர்த்தனபாண்டிய மன்னனிடம் முதலமைச்சராகப் பணிபுரிந்த மாணிக்கவாசகரிடம் பெரும் பொருளை கொடுத்து குதிரைகள் வாங்கி வரும்படி மன்னன் கூற, அதற்கிணங்க பெருமானார் போகும் வழியில் திருப்பெருந்துறையில் (ஆவுடையார் கோவில்) குருந்த மரத்தடியில் ஈசனே குருவாகத் தோன்றி அவருக்கு ஞானதீட்சை அளித்தார். பெரும் பொருளை திருக்கோவில் கட்டுவதற்கு செலவிட்டார். மாணிக்கவாசகர் இறைவன் அசரீரி வாக்குப்படி ஆவணி மூலம் தினத்தன்று குதிரைகள் வருவதாக மன்னனிடம் கூறினார். அவ்வாறு வரமால் போகவே மன்னன் மாணிக்கவாசகரைத் துன்புறுத்த சிவபெருமான் குதிரைகளோடு வந்த அவரை துன்பத்தில் இருந்து மீட்டார். அன்றிரவே குதிரைகள் அனைத்தும் நரிகளாக மாறி காடுகள் நோக்கி ஓடின. மனிதனுடைய வாழ்வியல் நெறிமுறைகளைக் கூறும் "திருவாசகத்தை" எழுதிய பெருமை மாணிக்கவாசகப் பெருமானையேச் சேரும்.

73. MANICKAVASAGAR
(Aani - Magam)

Manickavasagar, who is one among the four Samayakuravargal, was born at Thiruvathavur. He is also called as Vathavurar He was the Chief Minister to the King Arimarthana Pandiyan. The king asked him to buy horses entrusting him with great valuables. On his way for the purchase, The Lord appeared as Guru (The Preceptor) under a kuruntham Tree, in Thiruperunthural (Aavudaiyar Koil) and intiated him the "Gnana Diksha" He spent that great valuables to build the Temple (Thirukoli). He told the king that the horses would come on the day of Avani Moolam as per the eternal voice of the Lord. As there was no horses turned up as stated by him on the day the king tortured Manickavasagar. The Lord Shiva came with horses and saved him from the misery. On that night itself the horses turned into foxes and ran away to forest. The credit of rendering the "Thiruvasagam" which explains the Philosophy of life to humanity belongs to Manickavasaga Peruman.





74. சேக்கிழார்
(வைகாசி - பூசம்)

குன்றத்தூரில் அவதரித்த சேக்கிழாரின் இயற்பெயர் அருண்மொழி ராமத்தேவர். குலோத்துங்க அநபாய சோழ மன்னரின் முதலமைச்சராகப் பணியாற்றிய இலக்கிய நூல்களைக் கற்றறிந்த சேக்கிழார் அறுபத்து மூவரின் திருத்தொண்டினையும், அவர்களது பக்திநெறியினையும், முக்தி வழிகளையும் "பெரிய புராணம்" எனும் பெருமை வாய்ந்த நூலாக இயற்றி தில்லை சென்று அம்பலவாணரின் சன்னதியில் அமர்ந்தார். வானில் "உலகெலாம்" என ஒலிக் கேட்க அதுவே தில்லைக்கூத்தனாரின் ஒலியெனக் கருதி உலகெலாம் எனும் வரியை முதலடியாகக் கொண்டு "பெரியபுராணம்" எனும் நூலை எழுதி புகழ் பெற்றார். சோழ நாட்டில் மட்டுமல்லாது பிறநாடுகளிலும் சேக்கிழார் புகழ் பரவியது. இதனைக் கண்ட சோழ மன்னன் சேக்கிழாரை அரச யானை மீது ஆசனத்தில் அமர்த்தி தானும் அமர்ந்து சேக்கிழார் பெருமானுக்கு வெண்சாமரம் வீசினார். உத்தமச் சோழர் பல்லவர் என்ற பட்டத்தையும் அருளினார். சிவபெருமானுடைய புகழ் பரப்பிய அறுபத்து மூன்று நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை உலகறியச் செய்து பெரும் காவியத்தைப் படைத்த பெருமை சேக்கிழார் பெருமானையேச் சேரும்.

74. SEKKIZHAR
(Vaikasi - Poosam)

Sekkizhar was born at Kundrathur and his original name was Arunmoli Rama Thevar. He worked as the Chief Minister of King Kulothunga Anabaya Chola. He was a learned literature and was the author of the Great Periya Puranam. He brought out the devotional journey, ways of attaining bliss of the 63 Nayanmars beautifully and took that to Ambalavana's Sanctum Sanctorum of Thillai. There was an oracle "Ulagelam" (the entire world) in the Ether. Sekkizhar recognized as the voice of the Lord and took it as the first line of his composition and completed the master piece "Periya Puranam". The fame of Sekkizhar spread not only in the chola kingdom but also to the other countries. On account of this the Chola King placed Sekkizhar on the throne mounted on a sovereign elephant and he himself also seated along with him and fanned Sekkizhar with a Vensamaram (a soft fan). He accorded him the title of "Uthama Cholar Pallavar". The credit of rendering the epic by which the world came to know about the life history of sixty three Nayananmars who spread the praise of Lord Shiva, belongs to Sekkizhar Peruman.